தென்றல்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்
வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

ஆசிரியர்: கண்ணதாசன்

ஆண்டு சந்தா 6—0—0
6 மாதச் சந்தா 3—0—0

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு: மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை | 29—1—1955 | சனிக்கிழமை | இதழ் 31

ஆவடிக்கூத்தில் ஆகா! ஊகூ!

மாநாடு என்ற பெயரால் ஆவடியில் ஒரு பெரிய கோலாகலத் திருவிழாவை நடத்தியிருக்கிறது தேசிய காங்கிரஸ். இந்தத் திருவிழாவிற்கு கிட்டத்தட்ட பத்து லட்சம் வரை வாரி இறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய வீண்செலவும்-ஆடம்பரப்போக்கும் ரோமாபுரி மன்னர்களையும் மிஞ்சி விட்டது. இதை லண்டனிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ்' பத்திரிகை அழகாக எழுதி-தேசிய காங்கிரசை கேலி செய்திருக்கிறது.

"வறுமை நிறைந்த இந்தியா போன்ற நாட்டில் இந்த 'தமாஷா'வுக்கு 10 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. பழைய காலத்தில் காணப்பட்ட ரோமானிய முறைப்படி நடந்து கொள்ளுகிறார்கள். சீர்கேடுகளும், நிலைமையும் மாறுவதில்லை. ஆனால் கல கலத்துப் போகும் காங்கிரஸ் அமைப்பு அப்படியே நீடிக்கும். இப்படிப் பலவீனமான ஒரு கட்சியை நம்பித்தான் இந்தியாவின் எதிர்காலம் இருக்கிறது." நாமல்ல-இலண்டன் பத்திரிகை நிலைமையை தெளிவு படத்திருக்கலாம். நேருவுக்கு ரோஜா கன்னமாமே! அப்படியா, ஆமாம் கேள்விப்பட்டிருக்கிறேன் - இந்த முறை அவரைப்பார்த்து விடவேண்டும். இந்த எண்ணத்தோடு அதாவது-நேருவையும் மற்ற வடநாட்டு 'பெரிய மனிதர்'களையும் ஒரேயடியாகப் பார்த்து விடவேண்டும் என்ற எண்ணத்தோடு ஆவடிக்கு போனவர்கள் அனேகர். இப்படி பல நோக்கத்தோடு பல ரகத்தவர் அங்கே திரண்டனர். ஆனால் அவர்களில் பலருக்கு ஒன்றுமே விளங்கி இருக்காது. நேரு என்ன பேசினார்-தெரியாது! 'தோள் கண்டோர்-தோளே கண்டார்.' ஆமாம் அவர் வாய் அசை வதைத் தவிர வேறு ஒன்றையும் அறியார் பாவம். இப்படிப்பலர். கதர் சட்டை இரவல் வாங்கி 'அவதாரம்' மாறி, காரணமே யில்லாமல் பைத்தியக் காரத்தனமாக அங்கு போனவர்களும் உண்டு. கூட்டங்களில் உராய்வோர்-ஜோபடி செய்வோர்-இப்படி சில ரகத்தவர் ஆவடிக் கூத்தில் பங்கேற்றனர்.

விடப்பட்டவர் ஒரு பார்ப்பனர். வட. நாட்டு ஆலை அரசர்களும் - பண முதலைகளும்-பகட்டுக் காட்டும் தலைவர்களும், அமர்ந்திருந்தனர்-அனைவரும் வடநாட்டவர். அங்கிருந்த ஒரே ஒரு அசல் தமிழர் காமராசர் தான்! சுப்பிரமணியம்-பக்தவத்சலமும் கையிலே "கூஜா"வும் 'விசிறி'யுமாக வடநாட்டுத்தலைவர்களின் பாதசேவைக்கு அங்கே காத்திருந்தனர்.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து பேசிய அத்தனை வடநாட்டு தலைவர்களும் இந்தியில் பேசினராம். ஒன்றுமே புரிந்து கொள்ளாமல், புரியவில்லை என்பதை எடுத்துச் சொல்லவும் திராணி இல்லாமல், 'மரக்கட்டைகள்' போல உட்கார்ந்து இருந்தார்கள் நம் தமிழர். ஆனால் இரண்டொரு நம்மவர் தமிழில் பேசும் போது இந்தி வெறியர்கள்-குழப்பம் விளைத்து விட்டு வெளியேறினராம்.

இவர்கள் பேச்சு அவர்களுக்கும் அவர்கள் பேச்சு இவர்களுக்கும் புரியவில்லை. ஆனால் கூறுகிறார்கள் ஏக இந்தியா—நாமெல்லாம் 'குல்லாயோடு' சரி, மூளையில்லாதவர்கள் என்று கூறியதும்—பலருக்கு நினைவு வரவே—உடல் வியர்த்தே போனார்களாம்!

அடுத்து காளிபாத முகர்ஜி என்பவர் காங்கிரஸ் தேர்தலில் வெற்றி பெற ஓட்டர்களுக்கு 'சாராயம்' கொடுத்தார்கள் என்று குட்டை உடைக்கும்போது பல காங்கிரஸ் காரர்கள் முகத்தை தொங்க விட்டுக் கொண்டனராம்.

காங்கிரசில் ஏழைகளுக்கு இடமில்லை. பணமுதலைகள் இடம் பிடித்துக்கொண்டனர் என்று அல்குராய் சாஸ்திரியும், காங்கிரஸ் சுதந்திரம் பெற்றதும் கெட்டுவிட்டது, பதவியைத்தேடி ஓடும் பித்தர்களாக மாறிப்போயினர்" இப்படி யெல்லாம் வெளியான செய்தியைக்கேட்ட பலர் இரண்டாவது நாள் மாநாட்டிற்கு போகாமல் நின்று விட்டனராம். சில நாட்கள் ஒருவனை தூங்கவிடாமல் வைத்துக் கொண்டிருந்தால்—உண்மைகளையும் 'ரகசியங்'களையும் உளறிக் கொட்டிவிடுவான். காங்கிரஸ் தலைவர்களும்-அதைத்தான்

★ காந்தியார் இல்லையே காணவும் கேட்கவும் ★

விளக்கி இருக்கிறது. நடைபெற்ற அந்த மாநாட்டை, மாநாடு என்றழைப்பதை விட ஆவடிக்கூத்து என்று கூறலாம். காரணம் 'பெரிய பிள்ளை' களின் கூத்து தான் அங்கே நடை பெற்றுள்ளது, ஆவடிக்கு வந்திருந்த எந்த வட இந்தியத் தலைவர்களும் - பொறுப்பற்ற முறையிலேதான் - பேசியும் நடந்தும் இருக்கிறார்கள். ஏதோ வந்தோம், எக்கச்சக்கமான கூட்டம் சேர்ந்திருக்கிறது. கொள்கை விளக்கத்திற்கோ - அல்லது தேசத்தை வாழ்விக்க வந்த காங்கிரஸ் நாடு செழிக்க-வளம் கொழிக்க - வறுமையை ஒழிக்க என்னென்ன திட்டங்களை தீட்டுகிறது என்பதைப் பார்க்கவோ தான் அத்தனை பேரும் பெரும் அளவில் கூடி இருந்தார்கள் என்பதற்கில்லை! பண முதலைகளும் - சரிந்த தொந்திகளும் வீசிய வெள்ளித் தோட்டாக்களால் உருவாக்கப்பட்ட கோபுரத்தையும்-அதற்கு நடத்திய கும்பாபிஷேகத்தைப் பார்க்கவும் பலர் வந்

'ஒசி' யில் கிடைத்த நுழைவுச் சீட்டுகளைத் தூக்கிக்கொண்டு, மாம்பலமும் - மைலாப்பூரும் அங்கே குழுமியிருந்தது. ஆவடி மாநாடு 'அக்ரகார மாநாடோ' என்று எண்ணுமளவிற்கு 'ஐயர்களும்' 'அம்மாமிகளும்' சலுகை பெற்றனர் ஆவடிக் கூத்தில். உட்காரும் இடத்திலிருந்து, உணவு விடுதிவரை 'பூனூல்' களுக்குத் தான் முதல் சலுகை. இதைக்கண்ட பல கதர் சட்டைக்காரர்களும் 'என்னய்யா அக்ரமம்' என்று வாய் விட்டுக் கூறினராம். அதோடு 'கள்ள டிக்கெட்டுகள்' வேறு விலை போயிற்றும். ஆவடிக் கூத்தில் வட நாட்டாருக்கும் பார்ப்பனர்களுக்கும் தவிர வேறு யாருக்கும் முக்கியத்துவம் இல்லை. மலைபோல் குவிந்த இட்டலியையும்உணவையும்'அவாளே' பகிர்ந்து கொண்டனராம். தொண்டர்களுக்கும்-உண்மை உழைப்பாளிகளுக்கும் கூடச் சரிவரக் கிடைக்கவில்லையாம். காரணம் அந்த உணவுக் கமிட்டியின் பொறுப்பில் ஒரு தாய் வயிற்று மக்கள் என்று. 'சகோதரர்' களுக் குள்ளேயே மொழிக் குழப்பம்-தலைவர்கள் கூத்தாடி இருக்கிறார்கள்.

"காங்கிரசில் அயோக்கியத் தனமும்—ஒழுக்கக் கேடுகளும் மலிந்து விட்டன. 'பெரிய புள்ளி'களெல்லாம் இந்தக் குற்றச்சாட்டிற்கு சம்பந்தப்பட்டவர்களே; இதை நான் சவாலாகக் கூறுவேன். சாதாரண கையெழுத்துப்போடத் தெரிந்தவனெல்லாம் காங்கிரசில் நுழைந்ததால் தான் காங்கிரஸ் பலவீனம் அடைந்துவிட்டது." இப்படி ஒரு அணுகுண்டை நேரு தூக்கிப் போட்டதும், வடநாட்டுத் தலைவர்களுக்கு வீசிக்கொண்டிருந்த சுப்ரமணியத்திலிருந்து—'ஆகா' நேரு—'ஊகூ' 'நேரு! அவர் கண்ணை மூடினால் யாரே இந்நாட்டை ஆளவல்லார்—என்று தப்புக்கணக்கு போட்டுக் கொண்டிருந்தது ஏதுமறியா காங்கிரஸ்காரர்கள் வரை திடுக்கிட்டுப் போனார்களாம். முன்பொரு முறை நேரு—காங்கிரஸ்காரர்கள் ஆவடிக்கூத்தின்போது செய்திருக்கிறார்கள். நாம் அன்று மக்கள் மன்றத்தில் எதை எதைக்கூறி—காங்கிரஸ் பயனற்ற ஒரு ஸ்தாபனம்-தேய்ந்து கொண்டிருக்கிறது என்று காரணம் காட்டினோமோ-அதே குற்றச்சாட்டுகளை, காங்கிரஸ் மாநாட்டில்-காங்கிரஸ்காரர்களுக்கு மத்தியில்-காங்கிரஸ் தலைவர்களே கூறியுள்ளனர். இந்நிலையில் இதை ஆவடிக்கூத்து என்பதில் தவறிருக்கமுடியாது.

சினிமா நடிகையர் 'ஸ்டில்' களுக்காக சில 'ஸ்பெஷல்' 'போஸ்' கொடுப்பார்கள். அந்த 'போஸ்' கவர்ச்சிகரமாய் இருக்க வேண்டும் என்றும் விரும்புவார்கள்; நேரு பண்டிதர் அதில் கைதேர்ந்தவர். மேடைக்கு ஏறும்போதும்-உட்காரும்போதும்-பேசும்போதும் விதவிதமான 'போஸ்' களைக் கொடுப்பார். கீழே உட்கார்ந்திருப்பவனோ-'ஆகா அதோ நேருவைப்பார்!"

(8-ம் பக்கம் பார்க்க)

தேர்தலிலே தான் வெல்ல திருட்டுக் 'கள்' கொடுத்தாராம்!

எண்ணம்

கண்ணதாசன்

"ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து, ஆளேக்கடித்தானும்" என்றொரு பழமொழி சொல்லுவார்கள். படிப்படியாக, தீச் செயலில் முன்னேறுகிறவர்களைப் பார்த்து இப்படிச் சொல்லுவார்கள். இந்த முறையில் டெல்லி அரசும் முன்னேறுகிறது! இளித்தவாயர்கள் ஏமாந்த சோணகிரிகள் தென்னுட்டில் அதிகம் இருக்கிருர்கள் என்று அளவெடுத்து முடிவுகட்டி, "தென்னுட்டின் வளம் முழுவதையும் படிப்படியாகச் சுரண்ட, அடுத்தடுத்துச் சட்டம் தீட்டி வருகிறது. இதோ ஒரு புதிய சட்டம்! தென்னுட்டுப் பெருங் கோயில்களின் நிர்வாகத்தை இனி மத்திய அரசு எடுத்துக்கொள்ளும்!" பெருத்த அளவில் பணம் கிடந்த பகுதி இனி வடநாட்டின் கைக்குப் போகப் போகிறது. மிச்சமிருந்ததுஅதுதான் அதுவும் 'கோவிந்தா! அரோகரா' காங்கிரஸ் தோழர்களே! இந்தக் கொள்ளையில் உங்களுக்குப் பங்கு கிடைக்காது! என்ன செய்யப்போகிறீர்கள், இதிலாவது ?

இது பற்றி, நம் நாடு இதழ், 24—1—55 ல் ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது. அறிவுள்ள மக்களின் மனதை ஆராய்ச்சிக்கு இழுக்கும் அந்தத் தலையங்கம், நிலைமையின் நேரடிப் படப் பிடிப்பாகும். காங்கிரஸ் தோழர்கள், மிச்சமிருக்கும் அறிவை, அப்படி ஏதாவது இருந்தால் உபயோகித்து இதனைப் படித்து ஆராயுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். அந்தத்தலையங்கம்தான் நமது எண்ணமும் ஆகும் என்பதற்காக அப்படியே எடுத்துத் தருகிறோம்.

"சென்னை மாநிலத்தில் உள்ள சில முக்கியமான ஆலயங்களின் நிர்வாகத்தை 'புராதனச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்ட'த்தின் கீழ் இந்தியப் பேரரசு நேரடியாக மேற்கொள்வதற்கான திட்டங்கள்தீட்டி வருவதாகச் செய்தி வந்துள்ளது.

சிதம்பரம் நடராசரும், மதுரை மீனுட்சியும், இராமேஸ்வரம் இராமநாதரும், சீரங்கம் அரங்கனுதப் பெருமாளும், சீவில்லிப்புத்தூர் ஆண்டாள் அம்மையும் இனி டெல்லி தேவதையின் ஆணைக்கொப்பவே 'அருள்புரி'வார்களாம்!

ஆந்திராவில் உள்ள திருப்பதி வெங்கடேசுவரப் பெருமானுக்கும் அதே கதிதானும்!

மருந்துகளையும், மருந்து தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களையும் உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரத்தை மாநில அரசாங்கங்களிடமிருந்து மத்திய அரசாங்கம் சீக்கிரமே தன் வசப்படுத்திக் கொள்ளும் என்று ராஜ்கோட்டிலிருந்து வந்துள்ள செய்தி ஒன்று கூறுகிறது.

உணவுப் பொருள்கள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் வினியோக விலைக்கட்டுப்பாடு போன்றவற்றை நிர்ணயிக்கிற அதிகாரத்தை மாநில அரசாங்கத்திடமிருந்து மத்திய அரசாங்கம் மேற்கொள்ளுவது என்பதற்கான திருத்த மசோதா ஒன்று மக்கள் சபையில் வரப்போகிறதென செய்தி ஒன்று கடந்த டிசம்பர் மாதத்தில் வெளிவந்தது.

இப்படி மாநில அரசாங்கங்களிடம் இருக்கும் சுயாட்சிக்கான சிறிய சிறிய அதிகாரங்களை எல்லாம் ஒவ்வொன்ருக மத்திய அரசாங்கம் தட்டிப் பறித்துக்கொண்டு வருவதை நாம் காண்கிறோம்.

உணவுப் பொருள்கள் பற்றிய அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் தந்துவிடுவது என்ற தீர்மானம் சென்னை மேல்சபையில் விவாதத்திற்கு வந்தபோது, கட்சிப்பாகுபாடு இன்றி, பலரும், "மாநிலத்தின் அதிகார எல்லையில் தலையிடும் போக்கு இது; பிரிட்டிஷாரின் ஆட்சியின்போது கூட மாநிலங்களுக்கு அதிக சுதந்திரம் இருந்தது; உண்மையைச் சொல்ல வேண்டுமானுல், சென்னை அரசாங்கம் டில்லி அரசாங்கத்தின் தயவில்தான் வாழ்கிறது" என்று எடுத்துக்காட்டி, கண்டித்திருக்கின்றனர்.

இப்போது, மருந்துகளையும், அதற்கான பொருள்களையும் உற்பத்தி செய்வது, விநியோகிப்பது ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிற அதிகாரத்தையும், 'புராதனச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம்' என்ற பெயரால் கோவில்களின் நிர்வாக அதிகாரத்தையும், சென்னை போன்ற மாநிலங்களிடமிருந்து மத்திய ஆட்சி பிடுங்கிக்கொள்வதற்கான திட்டங்கள் தயாராவதாகச் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

இப்படியே, மாநில அரசாங்கங்களை வெறும் வரி வசூலிக்கும் 'ஏஜெண்டு' சர்க்காராக சிறிது சிறிதாக மாற்றி வருகிற டெல்லியின் ஆதிபத்தியப் போக்கை, நாம் அடிக்கடி எடுத்துக்காட்டி, கண்டித்தும்வந்திருக்கிறோம்.

இப்போது டெல்லி ஆட்சியாளர்கள், மாநிலங்களிடமிருந்து, மேற்குறிப்பிட்ட அதிகாரங்களைத் தட்டிப் பறிக்கும் வேகத்தைப் பார்த்தால், இந்த நாட்டு மக்களையும், அவர்களுக்காக அமைந்திருப்பதாகச் சொல்லப்படுகிற மாநில ஆட்சிகளையும், எங்கு கொண்டுபோய் நிறுத்தும் என்பதை நாம் கூறத்தேவையில்லை.

இந்தியப் பேரரசின் இந்த விபரீதப் போக்கு, டெல்லியின் ஏகாதிபத்திய எண்ணத்தை உறுதி செய்வதாக அமைந்திருக்கிறது என்ருல் அது மிகையாகாது. இன்று, ஒவ்வொன்ருக மாநிலங்களிடமிருந்து அதிகாரங்களைப் பிடுங்கிக்கொண்டு, மாநில ஆட்சிகளை வெறும் 'பொம்மை'களாக ஆக்கி வருகிற டெல்லியின் எண்ணம், நாளை— 'ஏன் இத்தனை மாநிலங்கள்; ஏன் தனித்தனி சட்டசபைகள், ஆட்சி பீடங்கள்; எல்லாவற்றிற்குமாக ஒரே சட்டசபையும் ஆட்சிபீடமும் போதுமானது; தொல்லை தரும் மாநில எல்லைகளை அழித்து விடுகிறோம்,'—என்று, மேற்கு பாகிஸ்தானை ஒரே அங்கமாக இணைக்கிருர்களே, அதே போன்று இங்குள்ள மாநிலங்களையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைத்துவிட வடநாட்டு ஆட்சியாளருக்கு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏற்கனவே அங்கு இம்மாதிரியான எண்ணம் நிலவுவதுடன், இரண்டொரு 'தீவிரவாதி'கள், அம்மாதிரி இந்தியா முழுவதையும் ஒரே அங்கமாக இணைத்து, பல்வேறு சட்டசபைகளையும், ஆட்சி பீடங்களையும் அழித்து, ஒரே ஆட்சியின் கீழ் ஆளவேண்டும் என்று பேசியும் வருகிருர்களாம்.

'எது எப்படியாயினும், நமக்கு மந்திரி என்ற ஒரு பெயர் இருக்கிறது; சட்டசபை உறுப்பினர் என்ற கௌரவம் இருக்கிறது,' என்ற எண்ணத்தில் அற்பமகிழ்ச்சியில் திளைத்திருப்பவர்களைத் தவிர, நியாய உணர்வும், மக்களாட்சிப் பண்பில் விசுவாசத்துடன் கூடிய நம்பிக்கையும் கொண்ட எவரும், மத்திய அரசாங்கம் படிப்படியாக மாநில அரசாங்கங்களை விழுங்கி வரும் இந்த ஆபத்தான நிலையைச் சரியென ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்றே கருதுகிறோம்.

மாநிலங்களிலேயே, மாவட்ட ஆட்சி மன்றங்கள், நகரசபைகள், பஞ்சாயத்து மன்றங்கள் இவைகளிடமெல்லாம் அதிகமான அதிகாரங்கள் தரப்படவேண்டும். இம்மாதிரி, மக்களின் நேரடிப் பிரதிநிதித்துவம்பெற்ற மன்றங்களிடம் அதிகாரங்கள் இருப்பதுதான் நல்ல மக்களாட்சிப் பண்பிற்கு உகந்தது.

எனவே, 'அதிகாரங்கள் நிரம்ப எங்களுக்கு வேண்டும், என்ற வேட்கை வளர்ந்துவரும் இந்த நாட்களில், டெல்லி ஆட்சிபீடம் மாநிலங்களிடம் உள்ள அதிகாரங்களையே தட்டிப்பறித்துக் கொள்கிறது என்ற செய்திகள்—அந்த டெல்லி ஆட்சியினர், தங்களையே சர்வாதிகாரிகளாக ஆக்கிக்கொள்ள ஏற்கெனவே திட்டமிட்டுள்ளபடி செய்து வரும் நடவடிக்கைகள்—என்பதைத்தான் சொல்கின்றன!

✱

வெட்கம்! வெட்கம்!

மந்திரி சுப்பிரமணியம் போன்றவர்களுக்கு புத்தி வரவேண்டிய சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது ஆவடி மாநாட்டில். வடக்கே இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த தலைவர்கள் எல்லாம் இந்தியிலேயே தங்கள் பேச்சை நிகழ்த்தினர். கனம் மந்திரியார் தமிழில் பேச ஆரம்பித்திருக்கிருர். உடனே சில இந்தி வெறியர்கள் கூச்சல் போட்டு இருக்கிருர்கள். இந்த மந்திரியும் ஆகா! இதோ ஆங்கிலத்தில் பேசுகிறேன் அமைதியாக இருங்கள் என்ற முறையில் ஆங்கிலத்தில் பேசினுராம்!

மாநாடு நடந்த இடம்தமிழகம். மாநாட்டில் திரண்டிருந்தவர்களில் முக்கால் பங்கிற்கும் - அதற்கு மேலும் தமிழர்கள்! மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாதபடி வடக்கு 'தேவதைகளில்', பலர், இந்தியிலேயே பேசி 'போர்' அடித்துக்கொண்டிருந்தார்கள். இதை எதிரில் உட்கார்ந்து 'கொலு பொம்மை'கள் போல கேட்டுக் கொண்டிருந்தார்கள் தமிழர்கள். ஆனுல் தமிழர்கள் அதிகமாய் இருந்த அந்த இடத்தில் ஒரு தமிழர் தமிழில் பேச முடியவில்லை. இன்னும் கொஞ்சம் தமிழில் பேசி இருந்தால் மேடையில் உட்கார்ந்திருந்த 'பனியாக்கள்' கல்எறிந்து இருப்பார்கள். அவ்வளவு ஆத்திரம் வந்துவிட்டது! தென்னுட்டில் வந்து தமிழை இழிவுபடுத்திஇருக்கிறது சில மார்வாடிகள். அதையும் சகித்துக்கொண்டு தமிழர்கள் பலர் பேசாமல் "நாங்கள் அடிமைகள் - வாய் இல்லை எதிர்க்க, வகை இல்லை ஆள - கைகட்டி சேவகம் செய்யக் காத்திருக்கிறோம்" என்பதைப்போல் மௌனம் சாதித்திருக்கிருர்கள். இந்தக் காட்சியை கண்முன் நிறுத்திப் பார்த்தால் பரிதாபமாக தோற்றமளிக்கிறது. வேதனை சிரிப்பாக மாறுகிறது. இதயப் புயல் பெருமூச்சாக வெளியேறுகிறது.

'தன்னைப் பழித்தவனை தாய் தடுத்தால் விடு. தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாதே' *என்றுர் புதுவையார், தன்னைக் கூட பழிக்கவில்லை; தமிழைப்பழித்திருக்கிருர்கள் வடநாட்டு இந்தி வெறியர்கள்; ஆனுல் ஒருமாநிலத்தின் நிதியமைச்சருக்கு திராணி இல்லை அவர்களை எதிர்க்க. காரணம் இவர் வாயில் மாட்டப்பட்டிருக்கும் கடிவாளத்தின் பிடி அவர்கள் கையில்!*

அன்றொரு நாள் கங்கைக்கரையில் தமிழரின் வீரத்தைப் பழித்தனர் தலை கனம் ஏறிப்போன இரண்டு ஆரியர் என்பதைக் கேட்ட அளவில், புயலெனக் கிளம்பி-புலியெனச் சீறினுன் சேரன். அவன் கண்களில் ஏறிய சிவப்பு, கனக விசயர் தலையில் கல் ஏற்றிய பிறகு தான் மாறிற்று என்று படிக்கிறோம் வீரகாவியத்தை - ஆனுல் இன்று...சில மிட்டாய் வண்டி உருட்டிகளின் மிரட்டலுக்கு ஒரு மாநிலத்தின் மந்திரி - நிதியமைச்சர் சுப்பிரமணியம் பணியவேண்டியிருக்கிறது. தமிழகத்தில் தமிழில் பேச எதிர்ப்பு; அதுவும் தமிழர் அல்லாத சிலதுகளால்; வெட்கம் விலாப்புறத்தைக் கொத்துகிறது, பொருதடக்கை வாளெங்கே? பொங்குமணி மார்பெங்கே? போர்க்களத்தில் எதுவரினும் புறங்கொடா வீரமெங்கே? என்றுகலிங்கத்துப் பரணியைப் படித்துவிட்டு சுப்பிரமணியத்தின் பரிதாபகரமான நிலையைப் பார்க்கும்போது அவமானச்சின்னமாகக் காட்சியளிக்கிருர். அங்கு இருப்பவர்களிடம் தன்மானம் துளியாவது இருந்திருந்தால், தமிழகத்தில் தமிழில் பேச ஒரு தமிழனுக்கு இடம்இல்லை என்ருல் தமிழர்களுக்காக - தமிழர்களின் நலனுக்காக-தமிழை அறியாதவர்கள்-தமிழைப் புரிந்துகொள்ளாதவர்கள் என்ன செய்துவிடப்போகிருர்கள் என்றுகூறி வெளியேறி இருக்கவேண்டும். ஆனுலும் 'கிளாமரில்' மயங்கி-மதியிழந்து -மானம் போனுலும் பரவாயில்லை என்று மந்திரியார் மௌனியாகி - தமிழர்களுக்கு இழுக்கு கற்பித்துள்ளார். இதை எண்ணும்பொழுது 'எழிலுள்ள நாடே! எடுப்பார்கைப் பிள்ளையே' என்று இதாலியக் கவிஞன் தாய்கம் தகாதவர்களின் கையில் சிக்கியிருப்பதை எண்ணி கண்ணீர் சிந்தியது நினைவிற்கு வருகிறது. தாய்மொழியில் பேச தாயகத்தில் உரிமை இல்லையாம்! அதுவும் ஒரு மாநிலத்து நிதியமைச்சருக்கு.

வெட்கம்! வெட்கம்!

—மணிமுடி

சீதை நெறி தவறியவள்! என் ?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அடுத்த ஸ்லோகத்தில் பின்வருமாறு கூறுகின்றான்.

"கண்ணழகியான சீதையே! உன்னுடைய அவயவங்களின் சௌந்தரியத்தைக் கண்டால் உலகமெல்லாம் மோகிக்கும்." சுலோகம் 3.

இந்தக் காட்சியையெல்லாம் மரத்தின்மேல் அமர்ந்தவண்ணம் மாருதி ரசித்துக்கொண்டிருக்கிறான். சீதையை அவன் எந்த நிலையில் கண்டான் என்பதை அனுமான், இலங்கையில் இருந்து திரும்பிய பின்னர் மகேந்திரபர்வதத்தில் ஜாம்பவான், அங்கதன் முதலிய வானரத் தோழர்களிடம் விவரிக்கின்றான்.

சுந்தரகாண்டம் 58வது சருக்கம். சுலோகம் 95.

"சீதாபிராட்டி அவ்வரக்கனைக் கண்டு பயந்து துடைகளை நெருக்கிக்கொண்டு ஸ்தனங்களைக் கைகளினால் கட்டி மறைத்துக் கொண்டாள்.'

இங்ஙனம் மூன்று இடங்களிலும், அசோகவனத்தில் சீதை ஆடையற்றவளாக, அலங்கோலநிலையில் காட்சியளித்தாள் என வால்மீகி வலியுறுத்திக் கூறுகின்றனர். இவ்வாறு மானமிழந்த நிலையிலும் சீதை உயிர் வாழ்ந்திருக்கிறாள் என்பதை அறிந்தபின்னராவது நமது தாய்மார்கள் சீதையை வணங்குவதை நிறுத்துவார்களா?

இதுமட்டுமல்ல! சீதையின் இழிகுணத்திற்கு எடுத்துக்காட்டாக அடுக்கடுக்கான பல சான்றுகள் உள்ளன. சீதையின் விபரீதமான சந்தேகக்குணம் இராமாயணம் முழுவதிலுமே ஆங்காங்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. முன்பு சீதை இலக்குவனை சந்தேகிக்கின்றாள் என்பதைக்கண்டோம். இப்பொழுது சீதை தனது கணவனையே எவ்வாறு சந்தேகிக்கின்றாள் என்பதை கவனிப்போம்.

இராவணனது கொடிய சொற்களால் தாக்கப்பட்ட சீதை புலம்பி அழுகின்றாள். அங்ஙனம் அழும்போது அயோத்தியையும் அங்கு இராமனுடன் தான் சுகித்து இருந்ததையும் எண்ணிப் பலவாறாகப் புலம்புகின்றாள். இங்ஙனம் புலம்புகையில் திடீரென ஓர் ஐயம் அவளுள்ளத்திலே எழுகின்றது. இதுவரையில் இராமன் தன்னைத் தேடி வந்ததாகத் தெரியவில்லையே. ஒருவேளை வேறு பெண்களை நாடி, தேடிப்போய்விட்டானோ என ஐயுறுகிறாள். இந்தச் சந்தேகத்தால் தூண்டப்பட்டு சீதை பின்வருமாறு கூறுகின்றாள்.

சருக்கம் 26. சுலோகம் 14. சுந்தரகாண்டம்.

"ஸ்ரீ இராமனே, நீர் தகப்பனார் கூறியபடி பதினான்கு வருடங்கள் வனத்தில் வாசம் செய்து பின் அயோத்திக்குப் போய் அனேகமான **உத்தம ஸ்திரிகளை** மணம் செய்து அவர்களோடு சுகத்தை அனுபவிக்கப் போகின்றீர்."

கற்புக்கரசிகளில் சிறந்தவளாயும், பத்தினிகளில் உயர்ந்தவளாயும் ஏற்றிப் போற்றப்படும் சீதையின் உள்ளம் போகும் போக்கைக் கவனியுங்கள். கேவலம் இழிந்த மனம் படைத்த மங்கையைப்போல சந்தேகம் கொள்கிறாள். அதுவும் யாரின் மேல்? மகா விஷ்ணுவின் மறுபிறப்பென்றும், ஏகபத்னி விரதன் என்றும் பாராட்டிப் புகழப்படும், இராமனைச் சந்தேகிக்கின்றாள். மகாலட்சுமியின் அவதாரமாக எண்ணப்படும் சீதை உலக நாயகனான தன் கணவன் தன்னைப் பிரிந்தவுடன் வேறு பெண்களை நாடிச்சென்று விடுவான் எனத் தீர்மானிக்கின்றாள்.

இந்தத் தகாத எண்ணம் சீதைக்கு உண்டாகலாமா? அப்படி உண்டாகியிருப்பின் அதற்குத் தக்க காரணங்கள் இல்லாது சீதை கூறியிருப்பாளா? அப்படி ஆய்ந்து பாராது குற்றம் சாட்டுபவளாக சீதை இருப்பின் அவள் அறிவுடையவள் என அறிஞர் ஏற்பரா? இராமனுடன் நெருங்கிப் பழகிய சீதையே இவ்விதம் கூறும்போது இராமனை ஏகபத்னி விரதன் எனக் கொள்வது அறிவுடைமை ஆகுமா?

தன் கணவனை மட்டுமல்ல, கணவனின் தூதுவனாக வந்த அனுமனையும் சீதை சந்தேகிக்கின்றாள்! அதுவும் எண்ணத் தகாத ஐயம் கொள்கின்றாள்! அனுமன் சீதையிடம் தான் இன்னான் என்பதைத் தெரிவித்து, கணையாழியைத் தந்து சீதையின் நம்பிக்கையைப் பெறுகின்றான். பின்னர் சீதையைத் தனது தோளில் ஏற்றிச் செல்வதாகக் கூறுகின்றான். சீதை இதை முதலில் நம்ப மறுக்கிறாள். உடனே அனுமன் தன் பேருருவத்தை எடுக்கின்றான். பிரமாண்டமான அவனது உருவத்தை சீதை காண்கிறாள்.

பிறகு தன் தவறை உணர்ந்த சீதை அனுமனைச் சமாதானப்படுத்துகிறாள். அனுமனும் இடைத்த சமயத்தை நழுவவிடாமல் மீண்டும் தன் தோளில் ஏறுமாறு சீதையை வேண்டுகிறான். இதைக் கேட்ட சீதை "அரக்கர்களால் நேரிடக்கூடிய அபாயங்களையும், விபத்துகளையும் எடுத்துக்கூறி மறுத்துரைக்கின்றாள். அன்பன் ஆஞ்சநேயனுக்குத் தெளிவு ஏற்படவில்லை. மீண்டும் மீண்டும் தனது கருத்தை வலியுறுத்துகின்றான். சீதையின் மனத்திலே விபரீத எண்ணங்கள் உண்டாகின்றன. உடனே பச்சையாகவே தான் வரமறுக்கும் காரணங்களைக் கூறுகின்றாள்.

சருக்கம் 37. சுலோகம் 43.

"**நீர் எவ்வளவு யோக்கியராயினும்** உம்மோடு நான் வருவது நலமன்று".

சுலோகம் 60

"வானரோத்தமரே! இஃது இப்படி இருக்கப் பதிவிரதையான ஸ்திரீகள் வேறொரு புருஷனைத் தொடார்கள். நானும் பதிவிரதையாகில் ஸ்ரீ ராமனைத்தவிர வேறொருவனைத் தீண்டமாட்டேன்.

சுலோகம் 61.

"முன்பு ஸ்ரீராமனில்லாதபோது தனியே இருந்த என்னை இராவணன் பலவந்தமாகத் தொட்டுவிட்டான். அப்போது **அவனையொன்றும்** செய்யமாட்டாமல் **வெறுமனே இருந்தேன்.**

இதைக்கேட்ட அனுமன் மனம் துணுக்குற்று பின்வருமாறு கூறுகின்றான்.

சருக்கம் 38. சுலோகம் 9.

"உன்னிடத்திலும் ஸ்ரீ ராமனிடத்திலுமுண்டான பக்தியினால் உன்னை நானே ஸ்ரீ ராமரிடம் கூட்டிக்கொண்டு போவதாகக் கூறினேன் **வேறு விதமாகச் சொன்னதல்ல".**

நண்பர்களே! சிந்தியுங்கள். இக்கட்டம் சிந்திக்கத் தகுந்தது. அனுமன் தனது தோளில் ஏறி வரும்படி வேண்டுகின்றான். அதைக்கேட்ட சீதை வேறுபல காரணங்களை முதலில் கூறுகிறாள். மீண்டும் அனுமன் வலியுறுத்தவே சீதை சந்தேகம் கொள்கிறாள். ஒருவேளை இவனும் தன் அழகில் மயங்கி இராவணனைப்போல கவர்ந்து செல்ல எண்ணுகிறானோ? கூண்டிலிருந்து தப்பிய கிளி, கடுவனிடம் சிக்கியதைப்போலத் தனது நிலை ஆகிவிடக்கூடாதே என்பதற்காக "நீர் எவ்வளவு யோக்கியராக இருப்பினும் உம்மைத் தீண்டேன்" என உறுதியாகக் கூறுகிறாள். பிறபுருஷனைத் தீண்டுபவள் பத்தினியல்ல என பத்தினிக்கு இலக்கணம் கூறிய சீதை இராவணன் தன்னைத் தீண்டியது நினைவிற்கு வந்தவுடன் எங்கே அனுமன் அதைக் கேட்டு விடுவானோ என அஞ்சியவளாய் அதற்குச் சமாதானம் கூறுகின்றாள்.

ப. நெடுமாறன்

ராமனில்லாதபோது தனியாக இருந்த அம்மையாரை இராவணன் பலவந்தமாகத் தொட்டுவிட்டானும். ஆகவே, ஒன்றும் செய்யமாட்டாதவளாய் அம்மை **வெறுமனே** இருந்தார்களாம். வெட்கத்தை விட்டுச் சீதை கூறுகிறாள், வெறுமனே இருந்தாளாம்.

அன்னியன் பலவந்தப் படுத்துகிறான். அம்மையார் வெறுமனே இருந்தார்களாம். கிராமத்திலே வசிக்கும் கல்வியறிவற்ற கோதை கூட எதிர்த்துப் போரிடுவாள்; துடியாய்த் துடித்திருப்பாள்; துவண்டிருப்பாள்; முடியாத நிலையில் உயிரை விட்டிருப்பாள். மானத்தைப் பறிகொடுத்து ஈன வாழ்வு வாழ்வதைவிட ஆவியை விடலாம் என எண்ணியிருப்பாள். ஆனால், அவள் கிராமத்துக் கோதைதானே, இவளோ சீதை; அவதாரம்; ஆண்டவரின் பத்தினி; மகாலட்சுமியின் மறுபிறப்பு. எனவே, எதும் செய்யமுடியாமல் வெறுமனே இருந்திருக்கிறாள்.

பரபுருஷனைத் தீண்டாதவளே பத்தினி என இலக்கணம் பாடிய சீதை அடுத்த வினாடியே அன்னியனைத் தீண்டிய அலங்கோலத்தைக் கூறுவதன் மூலம் தான் பத்தினி அல்ல என ஒப்புக்கொள்கிறாள். ஆனாலும் இங்குள்ள பக்த கோடிகள் பகுத்தறிவை இழந்து பத்தினி மீது பக்தி கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்கூறும் நம் மீது சாடுகின்றார்கள். பரம நாத்திகன் எனும் பட்டத்தையும் சூட்டுகின்றார்கள்.

இங்ஙனம் சீதை கூறிய சொற்கள் பாணங்களெனச் சீறிப்பாய்ந்து மாருதியின் உள்ளத்திலே தைத்திருக்கின்றன. மனம் பதறியவனாய். மாருதியும் "பக்தியினால் சொன்னேன். வேறுவிதமாகக் கூறியதல்ல" எனக் கூறுகின்றான். வேறுவிதம் என்றால் என்ன விதம்? சிந்தியுங்கள். நேர்மையான முறையில் அனுமன் பேசியிருந்தால் இந்தச் சமாதானம் செப்பத் தேவையற்றதொன்று.

ஒன்று, உலகமாதாவிற்குச் சமமான சீதை அன்பன் ஆஞ்சநேயனிடம் ஐயம் கொண்டு வார்த்தைகளை அள்ளிக் கொட்டியிருக்கவேண்டும். அல்லது, தான் கூறியதின் பொருளைச் சீதை புரிந்து கொண்டு பச்சையாகப் பரபுருஷனைத்தீண்ட மறுத்த பிறகு வெட்கம் விலாவைக் குத்த, வேதனையோடு அனுமான் வேறுவிதமாகக் கூறியதல்ல எனச் சமாளித்திருக்க வேண்டும். இருவரில் யார் யோக்கியர்? அம்மையாரா? ஆஞ்சநேயரா? அன்பர்கள் ஆச்சாரியாரின் சீடர்கள் கூறட்டும்!

பின்னர் அனுமன் சீதையிடம் சூளாமணியைப் பெற்றுக்கொண்டு இராமனிடம் சீதையைக்கண்டதற்கு அடையாளமாகச் செய்தி, அதுவும் இருவருக்குமே தெரிந்த அந்தரங்க அடையாளச்செய்தி ஒன்று கூறும்படி வேண்டுகின்றான். அம்மையார் என்ன கூறியிருக்க வேண்டும் நியாயமாக? அதுவும் அன்னியனான, அணுகிய அனுமனிடம் ஆடை நெகிழ்ந்த அலங்கோலத்தையும் அண்ணல் ஓடிவந்து அரவணைத்ததையுமா கூறுவது? தூதனாக வந்தவனிடம், குற்றவேல் புரிபவனிடம், செய்தி அறிந்து செல்ல வந்தவனிடம் காமரசம் சொட்டும் காதையைக் கூறியனுப்புகிறார் அம்மையார். கேளுங்கள் அந்தக் கேலிக்கூத்தை.

சித்திரகூட பர்வதத்தில் ஏகாந்தமாக இராமனிடம் சரச சல்லாபம் செய்ததைச் சீதை வர்ணிக்கிறாள்.

சருக்கம் 38. சுலோகங்கள் 14 முதல் 23 வரை.

"ஸ்ரீ ராமனே! அம்மலையருகில் அநேகபுஷ்பங்களின் பரிமளம் வீசுகிற தோட்டங்களில் வேர்த்து விடும்படி விளையாடியபின் இளைப்பாறுவதற்காக உம்முடைய அருகில் உட்கார்ந்தேன். (14).

"அப்பொழுது ஒரு காகம் வந்து எனது மாம்சத்தைத் தின்ன நினைத்து என்னை மூக்கால் கொத்திற்று. நானெழுந்து பேய்க் காகத்தை மண்கட்டியால் அடித்து விரட்டினேன். (15)

"நான் அடித்து ஓட்டினாலும் அக்காகமானது, மாம்சத்திற்கு ஆசைப்பட்டு என்னை மூக்கினால் கொத்திக்கொண்டு அங்கேயிருந்தது. (16)

"பின்னர் நான் அக்காகத்தின் மேல் சினமுற்றவளாய் அதை ஓட்டுவதற்காக அரையிலிருந்த மேகலையை யிழுக்கும்போது என் புடவை அவிழ்ந்தது. அப்பொழுது நீர் என்னைப் பார்த்துச் சிரித்தீர். (17).

"மாமிசத்தில் விருப்பமுற்ற காகம் எனது மார்பகத்தைக் கொத்திக் கொண்டிருக்கையில் அதன் மே

கோபித்தேன். அப்போது நீரென்னைப் பார்த்துப் பரிகாசம் செய்தீர். நான் வெட்கித் திரும்பி உம்மிடம் வந்தேன். (18)

நீர் உட்காரும்போது நான் உமது மடியில் உட்கார்ந்தேன். அப்போது நான் கோபித்திருக்கக் கண்டு நீர் எனக்கு நல்ல வார்த்தை சொல்லித்தேற்றினீர். (19) காகம் செய்த தீமையினால் கோபித்து வாதை பொறுக்கமாட்டாமல், கண்களில் வழியும் 'கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கையில் நீரென்னைப் பார்த்தீர் எனச் சொல்லும். (20).

''பின் களைப்பினால் இராகவன் மடியில் நான் தலைவைத்துத் தூங்கினேன். நான் எழுந்தபின் என்மடிமேல் ஸ்ரீ ராமன் தூங்கினார். அக்காகம் முன்போல வந்தது.'' (21)

''ராமன் மடியில் படுத்துறங்கி எழுந்தபின் என்னுடைய கொங்கையின் நடுவே அக்காகமோடி வந்து மூக்கினால் இழுத்தது.'' (22)

''அந்தக்காகம் அடிக்கடி ஓடி வந்து அதே இடத்தில் கிழித்தபோது, அங்கிருந்து, இரத்தம் வழிந்து இராமனின் மேல் விழுந்தது'' (23)

உடனே சீதை இராமனை எழுப்புகின்றாள். இராமன் விழித்தெழுந்து சீதையின் அவல நிலையைக்கண்டு ஆத்திரமடைந்து இங்ஙனம் செய்தவன் யார் எனக் கேட்கின்றான். கோபத்தோடு சுற்றும் முற்றும் கவனிக்கின்றான். காகத்தைப் பார்க்கிறான். இந்த நிகழ்ச்சியை சீதையே கூறுகிறாள்.

''இது சாதாரணக்காகமன்று. இந்திரனுடையபிள்ளை. வாயுவைப் போன்ற வேகமுடையது. அதனால் இவர் பார்த்த உடனே சீக்கிரமாக மறைந்து கொண்டது.''

உடனே இராமர் தர்ப்பையைக் கிள்ளி பாணமாக எய்கிறானாம். காகத்தின் உருவில் வந்த சயந்தன் சரணாகதியடைந்து தன் கண்களில் ஒன்றை இழக்கின்றானாம்.

தேவர்களுக்கு அரசனான இந்திரன் ஈன்றெடுத்த அருந்தவச் செல்வன், காக்கையின் உருக்கொண்டு வந்து சீதையின் மார்பை கொத்துகிறான். சீதைக்குத் தெரிய முடிகிறது, கொத்துவது வெறும் காகமல்ல, காக்கையுருவில் வந்திருக்கும் சயந்தன் என்று. ஆனால் அது இராமனுக்குத் தெரியவில்லை. அதைக்கண்டு ஆனந்தித்தவாறு அமர்ந்திருக்கின்றாள். காதல்மனையாளின் மார்பை காகம் கொத்திக்கிழிக்கிறது. கணவன் அதைக்கண்டு களித்தவண்ணம் இருக்கிறான். இதைக்கண்ட காரிகை கோபம் கொள்ளுகிறாள். இராமன் ஊடலைத்தீர்த்தபின் மனைவியின் மடியில் படுத்துறங்குகின்றான். சமயத்தை நழுவவிடாத சயந்தன் மீண்டும் வந்து சீதையின் மார்பைக் கொத்திக் கிழித்து விடுகிறான். இரத்தம் பெருகி இராமன்மேல் வழிகிறது. எனினும் அவன் விழிக்கவில்லை. இவ்வளவு நேரம் சும்மா இருந்த பத்தினிக்கு இரத்தத்தைக்கண்டதும் உணர்ச்சி தட்டியிருக்கிறது. உடனே கணவனை எழுப்புகிறாள். எவ்வளவு கேவலமான கதை. தந்தை ரிஷிபத்தினியைக் கெடுத்தான். தனயன் ஒருபடி மேலாகவே சென்று கடவுள் பத்தினியின் மார்பைக் கொத்துகிறான். நினைத்துப் பார்க்கவே கேவலமான இந்த நிகழ்ச்சிதான் சீதைக்கு நினைவில் இருக்கிறது. இதை அனுமனிடம் கூறுகின்றாள்.

மானத்தைவிட்டு, மரியாதையை விட்டு, வெட்கம் சிறிதும் இல்லாது, முன்பின் அறிந்திராத ஆடவனிடம், அதுவும் தூதுவனாக வந்தவனிடம் ''மார்பைக் கொத்தவிட்ட மானங்கெட்ட காதை பாடுகிறாள் சீதை. அதுவும் வரிவிடாமல் வர்ணிக்கின்றாள். சம்பவங்களை விடாமல் சித்தரிக்கின்றாள். ஆடை நெகிழ்ந்த அலங்கோலத்தையும், அண்ணல் அதைக்கண்டு ஆனந்த பரவசமாகியதையும், மடியில் படுத்து மகிழ்ச்சியுற்றதையும், ஊடல் கொண்டதையும், பின்னர் உவகையுற்றதையும், காகம் கொத்தியதையும், அங்கே இரத்தம் பெருகியதையும், காக்கையுருவில் கயவன் செய்த கயமையையும் சீதை சொல்லியிருக்கிறாள் ஒரு ஆடவன்முன். சந்துபொந்துகளிலே திரியும் பசடி கூடக் கூறக் கூசும் அந்தரங்கலீலைகளை உலகமாதா கூசாமல் கூறுகிறாள். இதை ஆஞ்சநேயன் எங்ஙனம் கேட்டுக் கொண்டிருந்தானோ? அந்த இராமனுக்குத்தான் இது வெளிச்சம்.

இனி யுத்தகாண்டம் செல்வோம். இராவணனும் அவனைச் சார்ந்தோரும் களத்திலே மடிந்தபிறகு வீடணனிற்குப் பட்டம் சூட்டப்பெறுகிறது. பின்னர் இராமன் சீதையை அழைத்து வரும்படி வேண்டுகிறான். சீதையும் அழைத்து வரப்படுகிறாள். இராமன் முன் வந்து வணங்குகின்றாள். வணங்கும் சீதையைக் கண்டதும் இராமனுக்கு என்ன காரணத்தாலோ சினம் பொங்குகின்றது. முதலில் தான் போரில் பெற்ற வெற்றிகளைக் குறித்துப் பேசிக்கொண்டே போகின்றான். இடையில் சீதையின் கண்களில் நீர் பொங்குகின்றது. அதைக் கண்டதும் இராமனுக்குக் கோபம் கொழுந்துவிட்டு எரிகின்றது. இராமன் அடக்க முடியாத கோபத்தோடு பேசுகின்றான்.

யுத்தகாண்டம் சருக்கம் 118. சுலோகம் 15.

''உத்தமியே! இது உனக்குத் தெரிந்திருக்கட்டும். எந்தப் போரின் பரிச்சிரமமானது, நன்னெறியைப் பாதுகாப்பவனும், பலவற்றாலும் அபவாதத்தையும், பிரசித்திபெற்ற எனது வம்சத்திற்குக் குறையை அகற்றும் பொருட்டு என்னால் நண்பர்களின் வீரத்தைக் கொண்டு கடக்கப்பட்டது. **உனக்காக என்னால் செய்யப்படவில்லை.**

கூறுகிறான் இராமன். ''சீதாய்! கூர்ந்து கவனி. எனது பரம்பரைக்கு ஏற்பட்ட இழுக்கைத் துடைப்பதற்காக இப்போர் நடைபெற்றதே ஒழிய, ஏ சீதையே! கேவலம் உனக்காக என எண்ணிக் கொள்ளாதே!'' இராமன் இப்படிக் கூறவேண்டும் என்றால் அவனது மனம் எந்தநிலையில் இருந்திருக்க வேண்டும்? சீதையைக் குறித்து எவ்வளவு கேவலமான எண்ணம் கொண்டிருக்க வேண்டும்? இதோடு மட்டுமல்ல, இன்னும் கேவலமாக இகழ்ந்துரைக்கின்றான்.

சருக்கம் 118. சுலோகம் 16.

''எனது முன்னிலையில் **சாரித்திர சம்சய** மேற்பட்டவளாக இருக்கும் நீ கண்ணோய் உள்ளவனுக்கு விளக்கு எவ்வண்ணமோ அவ்வண்ணம் எனக்கு மிகவும் வேண்டப்படாதவளாய் இருக்கின்றனை.''

சீதையின்மேல் இராமன் **சந்தேகம் கொள்கின்றான்.** எனவே, மனம் நொந்துபோன நான் சந்தேகிக்கத்தக்க உன்னை **விரும்பவில்லை** எனக் கூறிவிட்டு அடுத்தபடியாக ;

''ஜானகி! ஆகையால் நீ விடைபெற்றுக் கொண்டவளாய் இஷ்டப்படி **பத்துத் திசைகளிலும்** செல்வாயாக. உன்னால் எனக்கு ஆவதொன்றும் இல்லை.'' சுலோகம் 17

சீதையே போ. உன் பிரியப்படி போ. எங்கு வேண்டுமானாலும் செல். விவாக விலக்கு அளித்துவிட்டேன். அதாவது பூர்ண விடுதலை அளிக்கின்றேன். செல்லுவாயாக என இராமன் நாலுபேர் நடுவிலே கணவன் மனைவியை கூறத்தகாத வார்த்தைகளைக் கொட்டி இழிந்துரைக்கின்றான். மகா விஷ்ணுவின் மறுபிறப்பான இராமன் தன் மனைவியிடம் எவ்வளவு சந்தேகம் கொண்டிருந்தான் என்பது தெரியவில்லையா? மேலும் அவன் கூறுவதைக் கவனியுங்கள்.

சருக்கம் 118. சுலோகங்கள் 18 முதல் 24 முடிய.

''நற்குலத்தில் பிறந்தவனும், பெருமையடைந்தவனுமான எந்த புருஷன்தான் **பிறர் மனையில் வசித்த மனையாட்டியை** மீளவும் அன்பிற்குகந்த மனதுடன் அங்கீகரிப்பான்.'' (18)

''பெருமைவாய்ந்த நற்குலத்தை பாராட்டிக்கொள்ளும் நான் இராவணனது பாபத்தால் **இகழ்ச்சி அடைந்தவளும்** தீய கண்ணால் பார்க்கப்பட்டவளுமான உன்னை மீளவும் எங்ஙனம் ஏற்றுக்கொள்வேன். (19)

''என்னால் நற்கீர்த்தியானது சம்பாதிக்கப்பெற்றது. அதற்காகவே என்னால் நீ மீட்கப்பட்டாய்.'' (20)

''எனக்கு உன்னிடம் **மனப்பற்று** இல்லை. இஷ்டப்பிரகாரம் இவ்விடத்தினின்றும் செல்லுவாயாக.'' (21)

''உத்தமியே! தீர்மானங்கொண்ட என்னால் இது மேற்கண்டவாறு எடுத்துரைக்கப்பட்டது. லஷ்மணனிடமோ, பரதனிடமோ இருக்க உன் விருப்பம்போல தீர்மானம் செய்து கொள்''. (22)

''சீதையே! வானர மன்னனான சுக்ரீவனிடமோ, அரக்கர் மன்னனாகிய விபீஷணனிடமோ இருக்க உன் விருப்பம் எப்படியோ அப்படி மனதை திடப்படுத்திக்கொள். (23)

''சீதே! இராவணன் சிறந்த வனப்புற்று, மனதைக் கவர்ந்து, தனது வீட்டில் இருந்த உன்னை வெகுநாட்கள் மறந்திருக்கமாட்டான்.'' வானரர்களும், அரக்கர்களும், சுக்ரீவனும், வீடணனும், அனுமனும், இலக்குவனும் இன்னபிறரும் பெருங்கூட்டமாகச் சூழ்ந்திருக்க, வெட்கத்தை விட்டவனாய், இராமன் தன் மனைவியை நோக்கி பண்புடையொருவன் கூறத்தகாத சொற்றொடர்களை ஒன்றன்பின் ஒன்றாக பாணங்களை ஏவுவதைப்போல ஏவுகின்றான்.

சீதையே! உன்னை நான் சந்தேகிக்கின்றேன். உன் நடத்தையில் ஐயுறுகின்றேன். எனவே விடைபெற்றுக்கொள். உன் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் செல். நல்ல குலத்தில் பிறந்தவன் எவனும் பிறன் மனையில் வசித்த மனைவியை மீண்டும் ஏற்றுக்கொள்ள மாட்டான். எனவே இராவணனால் தீண்டப்பட்ட உன்னை ஏற்றுக்கொண்டு என் குலத்திற்கு இழுக்கைத் தேடிக்கொள்ளமாட்டேன். இழக்கப்பெற்ற என் மதிப்பை மீண்டும் நிலை நிறுத்தவே உன்னை மீட்டினேன். எனினும் உன்னை ஏற்றுக்கொள்ள என் மனம் மறுக்கின்றது. ஆகவே, உன் விருப்பம்போல எங்கு வேண்டுமானாலும் செல். இதோ இருக்கும் இலக்குவனை விரும்பினால் அவனிடம் இரு. அல்லது பரதனை நேசித்தால் அவனிடம் செல். அல்லது இங்கமர்ந்திருக்கும் வானர மன்னன் சுக்ரீவனிடம் சிந்தையைச் செலுத்தினால் அவனைச் சேர்ந்து வாழ். அல்லது அரக்கர் கோமானாகிய வீடணனை விரும்பினால் அவனுடன் இணைந்து வாழ். உன் மனதின் விருப்பம்போல நடந்து கொள். ஆனாலும் உன் வனப்பில் மயங்கி தன் வீட்டில் வைத்திருந்த இராவணன் இறந்துபட்டாலும் உன்னை வெகுநாள் மறந்திருக்க மாட்டான். விரைவில் திரும்பி வருவான் எனக் கேலியும் குத்தலும் பொங்கத் தனது பேச்சை முடிக்கிறான்.

இவ்வளவு கூறவேண்டுமானால் இராமனது மனம் சீதையின் நடத்தையில் எவ்வளவு அருவருப்பும் வெறுப்பும் கொண்டிருக்க வேண்டும் என்பது ஒருபுறமிருக்கட்டும். பொதுவாக ஒரு கணவன் தனது மனைவியைப் பார்த்து நான்குபேர் நடுவில் கூறும் வார்த்தைகளாக இவை தோன்றவில்லையே! ஆண்டவனின் அவதாரம் எனப்படும் இராமன் தனது பத்தினியை, நீ பரதனுடன் வாழ் அல்லது இலக்குவனிடம் இரு என்று கூறுவது? இதாவது பரவாயில்லை. ஏதோ குடும்பத்தகராறு எனக் கூறலாம். போரில் தனக்கு உறுதுணையாக நின்ற சுக்ரீவனையும், வீடணனையும் சுட்டிக்காட்டி இருவரில் யாரை விரும்புகின்றாயோ அவர்களுடன் சேர்ந்துவாழ் என்று கூறுவது? ஏதோ சீதையின் பேரில் கோபம், ஆத்திரத்துடன் பேசுகிறான். இந்த வேகத்தில் நண்பர்களையும் அவமதிக்கின்றான். ஒரு வேளை வாலி இறந்த பிறகு அவனது மனைவி தாரையைத் தனது உடைமையாக ஆக்கிக்கொண்ட சுக்ரீவனுக்குச் சீதையை ஏற்றுக்கொள்வதால் சுமையொன்றும் ஏற்பட்டுவிடாது எனக்கருதினான் போலும்! மேலும் தமையனுக்குத் துரோகம் புரிந்த வீடணன் நண்பனின் மனைவியை ஏற்றுக்கொள்வது சிநேகிதத் துரோகமாகக் கருதான் என இராமன் எண்ணி அங்ஙனம் கூறினான் போலும்! ஆச்சாரியாரும் அவரது சீடகோடிகளும் என்ன பதில் கூறுவார்கள் இதற்கு?

தெருவிலே திரியும் தாசிலோலன் சுவரேறித் தாண்டும் பழக்கமுடைய பத்தினியை, அவனுடன் ஒழிந்துபோ, இவனுடன் இணைந்துபோ எனச் செங்காங்கடை மொழியில் திட்டுவதுபோலல்லவா இதுஉள்ளது!

பெருங்கூட்டத்தின் நடுவே இவ்வாறு நிந்திக்கப்பட்ட சீதை வெட்கம் பொங்கப் பின்வருமாறு கூறுகின்றாள். இல்லை, இல்லை, வேண்டுகிறாள்.

சருக்கம் 119. சுலோகம் 9.

பிரபுவே! **பிரக்ஞையற்ற நிலையில்** நான் **அங்கஸ்பரிசத்தை** அடைந்து இருந்தேனாகில் அப்பொழுது எனது நினைவுடன் செய்தது அல்ல. அது **விஷயத்தில்** தெய்வமானது குற்றம் புரிந்ததாகின்றது.

(அடுத்த இதழில் முடியும்)

செய்வினை

—: ப. கண்ணன் :—

சேலத்தினின்றும் விருத்தாசலம் செல்லும் இரயில் காலை 7-25 மணிக்கு எத்தாப்பூர் பாதை புகை வண்டி நிலையத்தில் நின்றது. நடுத்தர வயதுள்ள மாதொருத்தியும், ஒரு சிறுமியும் பெட்டியொன்றில் ஏறினர்.

அந்தப் பெட்டியிலுள் நான்கு பெண்களும் மூன்று ஆண்களுமே இருந்தனர். பெண்கள் நடுத்தர வர்க்கத்தினின்றும் பிரபு வர்க்கத்திற்குத்தாவும் நிலையில் இருந்தனர். இரு ஆண்களும் அவ்வாறே. மற்றொருவர் புகழ் பெற்ற மாந்திரிகர் மருதாசலம்.

இரயிலின் கட கடசப்த வேகத்திலே உரத்தகுரலில் உற்சாகத்தோடு பேசிக்கொண்டு வந்தவர்கள் வண்டி நிலையத்திலே நின்றதும் சுருதியைக் குறைத்தனர். பேச்சும் குறைந்தது. பெட்டிக்குள் ஏறி வந்த புதிய பிரயாணிகளை ஆவலோடு வரவேற்றனர். தம்மருகே உட்கார இடமளித்தனர் அந்தப் பெண்கள்.

வண்டி நிலையத்தை விட்டுக்கிளம்பிற்று. மீண்டும் அவர்களது பேச்சும் துவங்கிற்று. "மாந்திரீகரே! இந்த எத்தாப்பூரிலே ஒரு அதிசயமான பெண்" என்றார் ஒருவர். என்னவென்று வினவினார் மாந்திரிகர். அவர் கூறினார். "நல்ல அழகு, தக்க வாலிபம், எல்லோரிடமும் அன்பாகப் பேசுகிறாள். பழகுகிறாள். கட்டிய கணவனைக் கண்டு விட்டால் மட்டும் காளியாக மாறி விடுகிறாள். அவனைப் பக்கத்திலே நெருங்க விடுவதில்லை. அடி உதை குத்து என்று பிய்த்துப் பினாத்தி விடுகிறாள்!"

"எப்பொழுதிருந்து?" மாந்திரிகர் மருதாசலம் கேட்டார்.

"அவர்கள் திருமணம் முடிந்து சாந்தி முகூர்த்தம் தொடங்கிய நாளிலேயே இதுவும் தொடங்கி விட்டதாம். தாலி கட்டிய கணவனுக்கு முதல் இரவு இன்பம் என்ன தெரியுமா? கட்டை விளக்கு மாற்றுப் பூசை!" என்றார் அவர்.

"ஐயயோ! அவள் பெண்ணா, பேயா?" என்று கேட்டாள் ஒருத்தி. சிரித்தனர் எல்லோரும்.

"செய்வினையாக இருக்கும்" என்றார் மாந்திரிகர். அப்படிச் சொல்லிய வண்ணம் அந்தப் புதிய பெண்ணின்முகத்தை நோக்கினார். பெருமூச்சு விட்டாள் அந்த மாது.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றாள் தலையை அசைத்தபடி.

"ஏவல், பில்லி, சூனியம், செய்வினைகளிலே இந்த அம்மாளுக்கு நம்பிக்கையில்லை போலிருக்கிறது" என்றார் மற்றொருவர்.

"இவர்களுக்கும் எத்தாப்பூர் தானே? அந்த விஷயத்தின் உண்மை இவர்களைக் கேட்டால் தெரியுமே!" என்றாள் மற்றொருத்தி. அவவாறே கேட்டனர். விந்தையான அவ்வரலாறு கூறினாள் அந்த மாது.

வசந்தி வனப்பார்ந்த புதுப் பருவ மங்கை. அவள் எத்தாப்பூரின் எழிலரசியாக விளங்கினாள்; என்றாலும், மேட்டுக்குடியிலேபிறக்காத காரணத்தால் அவள் மேனியழகு, மலிவுப் பொருளாக மங்கிக் கிடந்தது.

நாராயணன் சாமர்த்தியமுள்ள மண்பாண்டத் தொழிலாளி. நாராயணன் வனைந்த சட்டியும் பானையும் நாளுக்கு நாள் வலிவாகும்" என்பது எத்தாப்பூரைச் சுற்றிலும் வழங்கும் பழமொழி! தொழில் துறையில் புகழ் பெற்ற நாராயணன், பொருளாதாரத் துறையில் வளம் பெறவில்லை! அந்த நடுத்தர குடி மகனின் பல குழந்தைகளில் நான்காவதுமகளே வசந்தி. அவளுக்குப் பின்னும் சிறுமியருண்டு; சிறுவரும் உண்டு.

முதல் மூன்று பெண்களுக்கு மாப்பிள்ளை தேடி மணம் முடித்ததிலேயே கடன் சுமந்து, கருத்துக் குலைந்து அலுத்துப் போய் விட்டார் நாராயணன். எனவே வசந்திக்கு மணமகன் தேடுவதிலே தெம்பு இல்லாமல் நாட்கள் தேய்ந்தன.

சித்தையன் அழகான வாலிபன்; நற்குணமுள்ளவன். ஏழையென்ற காரணத்தாலேயே அவனது அழகும், குணமும் நண்பகல் விண்மீன்களாயின. எனினும் வசந்தியின் தாய் அன்னபூரணியின் நுண்ணறிவுக் கண்களிலே அவைகள் பளிச்சிட்டன. சித்தையனே தன் மகளுக்கேற்ற மணாளன் என்று, கருதினாள் அன்னபூரணி. தன் கருத்தை வெளியிட்டாள் கணவன் நாராயணனிடம்.

அவர் கூறினார்:— "பையன் நல்லவன் தான். அடைக்கலம் செட்டியாரின் மளிகைக் கடையிலே குமாஸ்தா. மாதம்நாற்பது ரூபாய் சம்பளம். வீட்டில் ஒரே தாய், ஆனாலும் வலி வந்தமாகக் கூப்பிட்டுக் கொடுப்பது நமக்குக் குறைவாயிற்றே அன்னபூரணி" என்று.

அவள் கேட்டாள்: "அவர்களாக வந்து கேட்டால்?"

அவர் சொன்னார்: "நிச்சயம் செய்து விடலாம்!"

பெற்றோர்கள் பேசிக்கொண்டது வசந்தியின் செவிகளுக்கு எட்டிற்று. அவள் மனதிலே விழுந்த திருமண நினைவு உடலெங்கும் புதுக் கிளர்ச்சி பரப்பிற்று. சித்தையனைப் பற்றிய விசாரணை அவள் சிந்தையிலே முளைத்தது.

சித்தையன் வீடு அடுத்த தெருவில். மளிகைக் கடைக்கு அவன் போவதும் வருவதும் நாராயணன் வீட்டு வழியாகத் தான். அவன் செல்லும் நேரங்களையறிய, அவனைப் பார்க்க வசந்தியின் மனமும், கண்களும் அடிக்கடி தெருப் பக்கம் சென்று திரும்பின.

மகளின் எண்ணமறிந்தாள் அன்னபூரணி. திருப்தியடைந்தாள். தன் கருத்தைச் சாதுரியமாக, சித்தையனின் தாய் தெய்வானைக்குப் படரவிட்டாள். சித்தையன் நாராயணன் வீட்டருகே மெதுவாக நடந்து, கண்களை ஓட்டத் தொடங்கினான் வீட்டினுள்.

அவளும் பார்த்தாள்; அவனும் பார்த்தான். பார்வையிலே புத்தொளியும், நெஞ்சிலே வேட்கையும் அரும்பின. அடிக்கடி பார்த்தனர். பார்வையை வளர்த்தனர். விருப்பம் தளிர்விட்டுத் தழைத்தது.

சித்தையனின் தாய், மகனுக்குப் பெண் கேட்க வந்தாள். நாராயணன் பச்சை வைதீகர். குலம் ஒன்றாக இருந்தும், கோத்திரம் வேறுபட்டிருப்பது கருதித் தயங்கினார். அன்னபூரணி விடவில்லை. சம்மதிக்கச் செய்துவிட்டாள் கணவரை. களிப்புக் கடலிலே மிதந்தாள் வசந்தி. அதே நிலை பெற்றான் சித்தையனும்.

நல்ல நாள் பார்த்து வெற்றிலை பாக்கு எடுத்தனர். வரன் முறை சம்பிரதாயப்படி எல்லாம் நடந்தன. ஐப்பசித் திங்கள் ஏழாம் நாள், திங்கட்கிழமை திருமண நாள் குறிப்பிட்டாயிற்று.

சித்தையனுக்கு வசந்தி, வசந்திக்கு சித்தையன் என்பது உறுதியாயிற்று. அவர்களது பார்வை மேலும் வளர்ந்து வளம் பெற்று நெருங்கத் தொடங்கிற்று.

நாராயணன் தொழில் வசதிக்காகத் தன் வீட்டருகே நான்கு அங்கணத்தில் ஓட்டு வில்லை வீடொன்று கட்டத் தொடங்கினார். திருமண நாளுக்குள் அதனை முடிக்க வேலை நடைபெற்றது.

இளைஞன் சித்தையன் அந்தக் கட்டிட வேலையைப் பார்க்கும் சாக்கில் அடிக்கடி நாராயணன் வீட்டிற்குச் சென்றான். மருமகனாக வரப்போகிறவன் தானே? எல்லோரும் விரும்பி வரவேற்றனர். மகிழ்ந்து உபசரித்தனர். வசந்தியை நேருக்குநேர் பார்க்கவும் நெருங்கிப் பேசவும் வாய்ப்பு கிடைத்தது. மணந்து வாழப் போகிறவர்கள் பழகட்டும் என்று அன்னபூரணியும் பாராமுகமாய் இருந்தாள். பார்வையிலே வளர்ந்த காதல் சந்திப்பிலே முதிர்ந்து, பேச்சிலே கனிந்து, தொட்டுப் பழகுவதிலே குதித்து விளையாடிற்று. உணர்ச்சி வேகம் தாங்கமாட்டாமல் தத்தளித்தன இரண்டு இளம் உள்ளங்களும்.

வீடு கட்டுவதைப் பார்க்க சித்தையனும் வந்தான்; வசந்தியும் சென்றாள். எந்த நேரத்திலும் சந்திப்புக்கு நல்லவாய்ப்பு! கட்டிடம் கண்டனர். புதியதோர் இன்பமும் கண்டனர். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற இதய கீதத்தை இருவரும் ஒரு சுருதியிலே இணைத்து முழக்கினர். "திருமணத்திற்கு இன்னும் இருபது நாட்கள் இருக்கின்றனவே! எப்பொழுது மறையுமோ இந்த இடைவெளி?" அவர்கள் உள்ளம் இவ்வாறு துடித்துத் துவண்டன.

பத்தாண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் சென்ற காளியப்பன், எத்தாப்பூருக்கு வந்தான். அன்று உதவாக்கரை ஊர் சுற்றி, பிழைக்க வழியின்றி சிங்கப்பூருக்கு ஓடியவன் சிறுவன் காளியப்பன். இன்று பொன்னும், பொருளும், சீரும் சிறப்புமாக வந்து சேர்ந்தான். "மண்ணாங்கட்டி" என்று அவனைப் புறக்கணித்த உறவினர்கள், "மகா புத்திசாலி" என்று அவனைச் சூழ்ந்தனர்; பாராட்டினர். பழுத்த மரத்தில் தானே பறவைகள் கூட்டம்?

காளியப்பன் வாட்ட சாட்டமான வாலிபன். அடிமரத்தினின்றும் ஏறிவந்தவன். சிங்கப்பூரில் சிரமப்பட்டு தேடிய பொருளுக்கு, எத்தாப்பூரில் இவ்வளவு மதிப்பிருக்குமென்று அவன் நினைக்கவில்லை. சூழ்நிலையின் பெருமிதத்தால் பூரித்தது மனம். தற்பெருமையும், செல்வச் செருக்கும் தலை கிறங்க வைத்தன.

"கையிலே சொத்து, தேகத்திலே இளமை; இவற்றை நுகர மாடி வீடொன்று. மனைக்கரசி ஒருத்தி தேவை" என்றார் காளியப்பனின் மாமாவான ஒரு ரசிகர். தேவையான யோசனையென்று ஒப்பினான் காளியப்பன். எண்ணத்தைச் செயலாக்க முனைந்தார் மாமா.

எத்தாப்பூரிலே காளியப்பனுக்கு ஏற்ற பெண் வசந்தி ஒருத்தியே என்று மாமா முடிவு செய்தார். காளியப்பனின் கண்களில் அவளைக் காட்டினார். வசந்தியின் பருவப் பேரழகு அவனைப் பற்றியிழுத்தது. இதயத்திலே இன்பத்தீ மூண்டது. அதே சமயத்தில் அவள் மணம் பேசப்பட்டிருக்கிறாள் என்ற செய்தி சிந்தையைக் கலக்கிற்று. மாமா தேற்றினார். "நாராயணன் நிலை எனக்குத் தெரியும். இருபது பொன் நகையும், ஐந்நூறு ரூபாயும் என்னிடம் கொடு. அதே ஐப்பசி மாதம், ஏழாம் நாள் திங்கட் கிழமையில் வசந்தியை உனக்கு மணம் முடிக்கிறேன்" என்றார். மகிழ்ந்தான் காளியப்பன். அவர் மனம் போல் செய்ய ஒப்பினான்.

வெள்ளிச் சந்தையிலே வியாபாரம் முடித்துத் திரும்புகையிலே நாராயணனைச் சந்தித்தார் மாமா. காளியப்பனின் பெருமைப் படலத்தை விரித்தார். சாகசமாகப் பேசினார். "இருபது பொன் நகைகள். பரியம் ஐந்நூறுரூபா. என்ன சொல்லுகிறாய்?" என்றார். நாராயணன் நாணயமாக வாழ்ந்தவர். ஒப்ப மறுத்தது மனம். எனினும் சித்தையனின் கோத்திரக் குறைபாட்டினை சற்று விரித்துப் பார்த்தார். கடன்தொல்லைதீர்க்கப்பணம் உதவுமே என்ற நினைவும் எழுந்தது. வீட்டுக்கு வாருங்கள் என்று சொல்லிச் சென்றார்.

அவரது குழப்ப நிலையறிந்த மாமா, நகைகளைத் தயார் பண்ணினார். பணத்தையும் மூட்டை கட்டிக் கொண்டார். நல்ல நேரத்தில் சகுனம் பார்த்துக் கொண்டு கிளம்பினார் நாராயணன் வீட்டுக்கு. பணத்தையும் நகைகளையும் அவர் முன்பு வைத்தார். பாக்யலக்ஷ்மியின் தரிசனம் நாராயணனின் மனத்தை மாற்றியது. அன்னபூரணியை அழைத்து விஷயத்தைச் சொன்னார். ஒப்பவில்லை அவள். "நமக்கு நாக்கு ஒன்றா இரண்டா? நாணயம் நம்பிக்கை மதிப்பு மரியாதை வேண்டாமா?" என்றாள்.

(9-ம் பக்கம் பார்க்க)

நந்தினியின் குரல் கேட்டு, பக்கத்துக் கூடாரங்களில் இருந்த வீரர்கள் எழுந்தோடிவந்தனர். நந்தினி அந்த உருவத்தின் கைகளுக்கிடையில் திணறிக்கொண்டிருந்தாள். ஒருவீரன் சடாரென்று பாய்ந்தான், அந்த உருவத்தின்மீது! நந்தினியை அணைத்துக்கொண்டிருந்த கைகளை இழுத்து, அந்த உருவத்தைத் தூக்கி நிறுத்தினான். இரண்டு கன்னத்திலும் மாறி மாறி அறைந்தான். இதற்குள், கலவரம் அறிந்த கருநாகமங்கை ஓடிவந்தாள். நடந்தது அறிந்தாள்; கொதித்தாள். கூட்டம் நெருக்கித் தள்ளி வேடிக்கைப் பார்த்தது. பல வீரர்களும் அன்னையின் செல்விக்கு ஏற்பட்ட அவமானத்தை எண்ணிக் கொதித்தனர்.

"ஒரே வெட்டாக வெட்டுங்கள்!" என்றான், ஒருவீரன்.

மற்றொருவன் வாளைஉருவினான்.

மூன்றுமவன் தடுத்து, "கொன்றுவிட்டால், யார் இவன் என்பதை அறியமுடியாது. நில். இவனைக் கட்டி இழுத்து வெளியில் கொண்டுவாருங்கள்!" என்றான்.

கருநாகமங்கை, தலையை ஆட்டி, "அதுதான் சரி! வெளியில் கொண்டுவாருங்கள்" என்றாள்.

நந்தினி, அவிழ்ந்த கூந்தலும் அழுத கண்ணுமாய் நின்றாள்.

"அயோக்கியன்!"

"அக்ரமக்காரன்!"

"அங்கம் அங்கமாக வெட்ட வேண்டும்."

"அணு அணுவாகச் சிதைக்க வேண்டும்."

"அரிசங்கமனின் ஆளாகத்தான் இருக்கவேண்டும். இல்லையென்றால், நந்தினியைக் குறிவைப்பானா?"

"எப்படி இவன், இடம் கண்டு வந்தான? யாரோ சதிகாரர்கள், நமது கூட்டத்தில் கலந்திருக்கிறார்கள்!"

"இனி எச்சரிக்கையாய் யிருக்க வேண்டும்" இப்படிப் பலவாறாகக் கூட்டம் பேசிற்று. நந்தினியைத் தன் தோளில் சாத்தியவாறு, வெளியில் கொண்டுவந்தாள் மங்கை.

அதற்குள் வீரர்கள், அந்த அக்ரமக்காரனை வெளியில் இழுத்துவந்து கம்பத்தில் கட்டினர்.

மங்கை நந்தினியை உட்கார வைத்து, பக்கத்தில் இருதோழியரை அமர்த்தி, ஆசுவாசப் படுத்திவிட்டு, கட்டப்பட்டிருக்கும் ஆளிடத்தில் வந்தாள். அவனைச் சுற்றி நின்ற வீரர்களைப் பார்த்து, "விலகுங்கள்!" என்று உத்தரவிட்டாள். வீரர் கூட்டம் அமைதிகொண்டு விலகியது. தனியே, அந்த ஆளின் எதிரே போய்நின்றாள் மங்கை. எரிதணல்போல் காட்சி தந்த கண்களால், அவனை விழித்துப் பார்த்தாள். ஆள் அழகன் - அறிமுகமில்லாத முகம் - அக்ரமம் செய்திருக்கிறான். இதில் அரிசங்கமனுக்குப் பங்கிருக்கவேண்டும். அத்தனையும் இவனிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டும், என்று தீர்மானித்தாள்.

"யார் நீ? உண்மையைச் சொல்' என்று அதட்டினாள்.

அவன் மௌனமாக நின்றான்.

கூட்டம், "சொல்லடா துன்மார்க்கா!" என்று கத்தியது.

அவன் புன்னகை புரிந்தான்.

"சொல்கிறாயா? இல்லையா? மீண்டும் மௌனம் சாதித்தால் சாட்டையடி விழும்!" என்றாள் மங்கை.

அவன் வாய் திறக்கவில்லை.

"சாட்டையடி கொடுங்கள்" என்று கூவினாள், மங்கை.

ஒருவன் பயங்கரமான சாட்டை ஒன்றைக் கொண்டுவந்தான். அப்போதும் அந்த உருவம் புன்னகையோடு மௌனம் சாதித்தது.

'பளார்' என்று ஒரு அடி, உருவத்தின் காலில் விழுந்தது. உடனே அந்த உருவம், "நன்று! நன்று" என்று கூவியது! "நன்றா? அடி விழுந்தது நன்றா?" என்று அதிசயித்தது கூட்டம்.

"வீரர்கள் கையில் இன்னும் பலம் இருக்கிறது. சரி; என்னை அவிழ்த்துவிடுங்கள். உண்மையைச் சொல்லி விடுகிறேன்!" என்றது அது.

மங்கை, அவனை அவிழ்த்துவிடும்படி சைகை காட்டினாள்.

அந்த உருவம், அவிழ்த்துவிடப் பட்டது.

"ஒரு முடாவில் தண்ணீர் கொண்டுவாருங்கள்!" என்றது அந்த உருவம்,

"தண்ணீரா? எதற்கு?" இது மங்கை.

"அப்போதுதான் முழுஉண்மையும் தெரியும்!"

மங்கை சம்மதித்தாள்; தண்ணீர் வந்தது. அந்த உருவம் படபடவென்று தன் தலைப்பாகையை எடுத்தது. உள்ளே சுருட்டி வைக்கப்பட்டிருந்த ஆறடிக்கூந்தல் தொப்பென்று அவிழ்ந்து, அந்த உருவத்தின் முதுகில் புரள ஆரம்பித்தது, மீசை எடுக்கப்பட்டது; தண்ணீரில் அந்த உருவம், முகம் கழுவியது.

கூட்டம் ஆச்சரியமாக, இமை கொட்டாது நின்றது.

யார்? யார்? ஆ!

"கமலினி!" என்று அன்பும் ஆவலும் மிஞ்சக்கூவினாள், மங்கை.

"அக்கா!" என்று ஓடிவந்து கட்டிக்கொண்டாள், கமலினி! ஆம்; அவளேதான்! இடைதுறையானிடம் நடித்துக்கொண்டிருந்த அதே கமலினிதான்! தளநாயகனுக்கு வேவு கூறிய அதே கமலினி தான்.

கூட்டம் உற்சாகத்தால் குதித்தது. நந்தினிக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. கமலினியை அவளுக்கு முன்பின் தெரியாது. ஆகவே அவள் குழப்பத்தில் இருந்தாள்.

அதற்குள் கமலினி ஓடிவந்து நந்தினியைக் கட்டிக்கொண்டு மீண்டும் முத்தம் கொடுக்க ஆரம்பித்தாள். இப்போது நந்தினியும் மறுக்கவில்லை; கூட்டமும் தடுக்கவில்லை.

மங்கை மெதுவாக அவர்கள் பக்கம் வந்து, அமர்ந்து, நந்தினியிடம், "நந்தினி! இவள் உன் சகோதரி! ஆம், உன் அன்னையின் அன்பில் வளர்ந்த இவள் முறையில் உனக்கு சகோதரிதான்! இடைதுறை நாட்டில் வேவுக் காரியாக நியமிக்கப்பட்டாள். அதன் மூலம் சோழநாட்டிற்கு அடிக்கடி போய் வரும் வசதிபெற்றாள். சோழ நாட்டிலிருந்து, நடைபெறும் விவரங்களை அறிவித்துக்கொண்டிருந்தாள். அரிசங்கமனிடம் தூது போவதுபோல இடைதுறையானிடம் நடித்து, அங்கே சென்று நடக்கும் காரியங்களைத் தெரிந்துகொள்வதாக எழுதியிருந்தாள். அப்போது பலமுறை உன்னைப்பற்றியும் விசாரித்து எழுதியிருக்கிறாள். உன் காதலர் பற்றிக் கூட எழுதியிருந்தாள். பல் ஆண்டுகளுக்குப்பின் இப்போதுதான் சந்திக்கிறோம்" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

வீரர்கள் கலைந்து, அதே பேச்சாகப் பேசிச் சிரித்தவண்ணம் காலைக் கடன்களை முடிக்கப் புறப்பட்டனர். மங்கை, நந்தினி, கமலினி ஆகிய மூவரும் உற்சாகத்தோடு எழுந்து நதிப்புறம் சென்றனர். தூரத்தில் ஒரு வீரன் தனியாக நிற்பதை நந்தினி கண்டாள். அவன் இந்த மூவரையும் பார்த்தபடி நிற்பதையும் அவள் கவனித்தாள். அவன் யாரென அவளால் சுலபத்தில் அடையாளங் கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால், நந்தினி கவனித்த அந்த வீரனை மங்கை கவனிக்கவில்லை. 'சட்' டென்று நந்தினி, மங்கையைத் தொட்டு, அதோ பார்!" என்றாள்.

மங்கை திரும்பிப் பார்த்தாள். அவள் முகம் மாறுபட்டது. நந்தினியை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். அந்தப் பார்வை, "அது உனக்குத் தெரியுமா!" என்று கேட்பதுபோல இருந்தது. நந்தினியும் தன் தவறை உணர்ந்தாள். "தவறு செய்துவிட்டோமே!" என்று அவள் உள்ளம் வருந்தியது. ஆனாலும், 'இனி மறைத்துப் பயனில்லை' என்று எண்ணினாள். "மறைத்தால், மங்கையின் மனதில் குழப்பம் இருந்துகொண்டேயிருக்கும்" என்று எண்ணி, ஒரு முடிவுக்கு வந்தாள். முன்பின் யோசிக்காமல், மங்கையிடம், "எல்லாம் தெரியும்! கவலைப்படாதே! போய் அவரைக் கவனி, பிறகு பேசுவோம்!" என்று சொல்ல வந்தவள் ஏதோ எண்ணி மீண்டும் வாயை மூடிக்கொணடாள். மங்கை முகம் சிவக்க, அவர்களுடனேயே மௌனமாகச் சென்றாள்.

மூவரும் பேசாமல், நதிக்கரைக்கு வந்தனர். சுழித்துக் கொண்டு ஓடும் வெள்ளம் மூவர் மனதிலும் வட்டமிடும் எண்ணங்களைப் படம் பிடித்தது. இளங்கதி

ரின் ஒளிக்கதிர்கள் நதியில் வரி போடும் அலைகளைக் கட்டித் தழுவின. மூவரின் மேனிக்ளையும் அந்த இளங் கதிர் மினுக்கத் தவறவில்லை.

நந்தினி வாய் திறந்தாள்.

" கிழக்கு நோக்கி ஓடும் நதியின் அலைகள் தெற்குக் கரையிலும் மோதுகின்றன !'' என்றாள், நதியைப் பார்த்தவாறு.

ஆமாம் ! ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இடையில் பிரிந்து தெற்கு நோக்கியே அலைகள் சில வருகின்றன !'' என்றாள், கமலினி அதனை விளக்கும் பாணியில், ஆச்சரியத்தோடு !

உண்மையில் அவர்கள் இருவரும் நதி அலைகளைப் பற்றியே பேசினார்கள். ஆனால், மங்கைக்கு அது தன்னைப் பார்த்து சாடை பேசுவது போல் இருந்தது. தன்னை நதி என்றும், தான் அவர்களோடு வந்ததை, கிழக்குநோக்கி ஓடுவது என்றும், தன் எண்ணம் காதலனிடம் இருப்பதை, தென்கரையில்மோதும் அலைகளாகவும் உவமிக்கிறார்களோ என்று ஐயப்பட்டாள்.

கமலினி வேடிக்கையாக, "என்ன அவசரம் பார் இந்த நதிக்கு ! கொஞ்சம் பொறுமை இருக்கக்கூடாதா!'' என்றாள்.

மங்கைக்கு 'சுருக்'கென்று தைத்தது. நந்தினி, களங்கமின்றி, "காதல் வேகத்தைவிட அதிக வேகம் !'' என்றாள்.

மங்கை, தன்னைத்தான் குறிக்கிறார்கள் என்று முடிவே கட்டி விட்டாள் !

கமலினி, "காதல் வேகம், நதியைக்கூட விடவில்லையா ! அடி குறும்புக்காரி !'' என்று நந்தினியின் கன்னத்தில் தட்டினாள்.

இதுவரை பொறுமையாக இருந்த மங்கை, பொறுமை இழந்தாள். சலனமின்றி, '' பருவம் பலரையும் தான் ஆட்டிப்படைக்கிறது ! இன்றைக்கு தப்பியவர்கள் கூட நாளைக்கு விழுந்துவிடுகிறார்கள். இதில் பாகுபாடு என்ன இருக்கிறது !'' என்றாள்.

நந்தினிக்கு யாவும் இப்போது புரிந்து விட்டது ! தாங்கள் விளையாட்டாகப் பேசியதை, மங்கை சாடைப் பேச்சாகக் கருதுகிறாள் போலிருக்கிறது என்று இப்போது நினைந்தாள். அவளுக்கு, தன் மீது சந்தேகம் ஏற்பட்டு விட்டதையும், அவளது காதலைத்தான் அறிந்துகொண்டு விட்டதை உணர்ந்துள்ளதையும் இப்போது அறிந்தாள். இனியும் நேரடியாகப் பேசித் தீர்க்காவிட்டால், மனக்குழப்பம் நீடித்துக்கொண்டே போகும் என்று அவளது இதயம் கூறிற்று.

இதற்குள் கமலினி, ஆடைகளைக் கூட களையாமல் 'தொப்'பென்று நதியில் விழுந்து ஆட ஆரம்பித்தாள் ; நதிக்குள் அமர்ந்தவாறே ...ல் துலக்க ஆரம்பித்தாள். இந்த நேரத்தைத் தவற விடக் கூடாது என்று நினைந்த நந்தினி மங்கையின் அருகில் வந்து, '' மங்கை ; ...க்கார். கொஞ்சம் பேசவேண்டும்'' என்று உரிமையோடு கூறினாள்.

மங்கையும், "சரி ! அதற்காகத்தான் இருக்கும் '' என்று எண்ணிட்டவாறு, அமர்ந்தாள்.

நந்தினி அவள் பக்கத்தில் அமர்ந்து, '' மங்கை ! என்னைத் ...வறாக எண்ணிக் கொள்ளாதே ! அவரைக் காதலிப்பது எனக்குத் தெரியும். ஒருநாள் இரவு, நான் ...தைக் கண்டு விட்டேன். தவறு தான் என்றாலும், என்னையறியாமல் நடந்து விட்டது ! ஆனாலும், உன்னிடத்திலே அதைச் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். வாய் தவறி வந்து, நீ குழம்ப வேண்டிய நிலை ஏற்பட்டதால் இப்போது சொல்லுகிறேன். எனக்குத் தெரிந்து விட்டதே என்று வருந்தாதே. இது நடக்கக் கூடாத காரியமல்ல !'' என்றாள்.

மங்கை, தலை குனிந்தபடி, "இது அன்னையின் காதில் சீக்கிரம் விழுந்தால், அவர்கள், இங்கு நான் செய்த பணி இதுதானோ என்று நினைப்பார்கள் !'' என்றாள்.

'' நிச்சயமாக விழாது ! பின்னால் எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்ல நான் இருக்கிறேன் !'' என்று நந்தினி உறுதியளித்தாள்.

'' இது கமலினிக்குத் தெரிய வேண்டாம் !'' என்று மெதுவாகக் கேட்டுக் கொண்டாள் மங்கை.

'' தெரியாது ! அவளுக்கு ஓட்டை வாய்போல இருக்கிறது ! இது என்னுடனேயே இருக்கும் !'' என்றாள், நந்தினி.

சிறிது நேரம் அந்த இடத்தை அமைதி ஆண்டது. இடையிடையே, கமலினி தண்ணீர் கொப்பளிக்கும் சப்தமும் கள்ளக் குரலில் பாடும் சப்தமும் கேட்டுக்கொண்டே இருந்தன. பிறகு மங்கை மெதுவாக, நந்தினியை விசாரிக்க ஆரம்பித்தாள்.

'' நந்தினி ! உன் காதல் பற்றி ஒருமுறை கமலினி எங்களுக்கு எழுதியிருந்தாள். உன் காதலன் பெரிய வீரனாமே ?'' என்று கடைக் கண் பார்வையோடு கேட்டாள்.

நந்தினிக்குப் பெருமை தாள முடியவில்லை. உடல் சிலிர்த்தது.

'' ஆமாம் ! இப்போது கூட இடைதுறைப்போருக்கு அவர்தான் போயிருக்கிறார். மன்னருக்கு அவரிடத்திலே உயிர். இருவரும் தோளில் கைபோட்டுப் பேசிக் கொள்வார்கள். ஒருநாள் கூட அவரைப் பார்க்காமல், மன்னரால் இருக்கமுடியாது ! நீ அவரைப் பார்த்திருக்க மாட்டாய். மங்கை ! நான் பெருமைக்குச் சொல்லவில்லை. பார்ப்பதற்கு அவர் தங்கச் சிலை மாதிரி இருப்பார் ! வலதுகையை மடக்கினாரானால் சதை அப்படியே திரண்டு திரண்டு கோலம் போடும். எழுதிவைத்த மாதிரி முகம் அவருக்கு. என்னை எதிரே உட்கார வைத்துப் பார்த்துக் கொண்டே இருப்பார்.

இடையிடேயே '' நந்தினி ! '' என்று தன்னையும் அறியாமல் அழைப்பார். அப்போது அவர் முகம் குழந்தை மாதிரி ஆகிவிடும் ! என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

மங்கையும் சிரித்தாள்.

பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, கண்ணே ! என் மடியில் சாய்ந்து கொள் !, என்று கெஞ்சுவார். வெகு நேரம் மறுத்துவிட்டு அவர் அழுகிற அளவுக்கு வந்ததும் சாய்ந்து கொள்வேன். அப்பாடா ! அதில் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா ? என்னென்னவோ வர்ணிப்பார் ! முத்தமாகப் பொழிந்து தள்ளுவார் ! உதட்டை ஒருமுறை கடித்துவிட்டார் ! அதற்குப்பிறகு... ......உரைப்பு சாப்பிடும்போதெல்லாம் உதடு எரியும்......''

நந்தினி, வெட்கப்படாமல் காதல் உணர்வில் பேசிக்கொண்டே போனாள் ! மங்கை இதையெல்லாம் ஆச்சரியமின்றி கவனித்தாள். அவளுக்கு அவள் சுகம்! இவளுக்கு இவள் சுகம் ! நந்தினி மேலும் பேசவில்லை. பழைய ஞாபகங்களை உருவகப்படுத்திப் பார்த்தபடி புளகாங்கிதம் பெற்றாள் ! இப்போது மங்கையும் நந்தினியும் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். மங்கை, தான் களவு மணம் புரிந்ததுபற்றியும் தன் காதலன் தன்னை மகிழ்வித்தது பற்றியும் கூறினாள். தான் முதன் முதலாக உடலுறவு கொண்டது அன்று இரவுதான் என்றும் கூறினாள். நத்தினி உடனே, "ஐயோ ! ஐயோ !'' என்றாள்.

"என் ?'' என்று கேட்டாள் மங்கை.

'' பகிரங்கத் திருமணத்திற்குமுன்னால் உடலுறவு கொள்வதென்றால் எனக்குப்பயம் ! ஐயோ ! அப்படிச் செய்யலாமா !'' என்று அதிசயித்தாள், நந்தினி !

மங்கை முகத்தை நாட்டிய பாணியில் ஆட்டி, '' சும்மா கதை அளக்காதே ! நீ பேசாமலா இருந்திருப்பாய் !'' என்று தீர்மானம் தொனிக்கக் கூறினாள். நந்தினி, ' நிச்சயமாகச் சொல்கிறேன் மங்கை! ஆரத் தழுவியது உண்மை ; அதரத் தேன் உண்டதும் உண்மை ; கிட்டவே இருந்ததும் உண்மை ; தொட்டு விளையாடியதும் உண்மை. ஆனால் கடைசி எல்லைக்கு நாங்கள் போகவில்லை !'' என்றாள்.

மங்கை உடனே, '' ஊம்...என்னால் நம்பமுடியவில்லை. இவ்வளவுக்கும் பிறகு சும்மாவே இருந்திருப்பாய் என்று கனவுகூடக்காண முடியாது. சும்மா அளக்காதே ! உண்மையைச் சொல் !'' என்றாள்.

கண்ணதாசன்

நந்தினி, '' சொன்னால் நம்ப மாட்டாய் ! நாங்கள் அதில் எச்சரிக்கையாகவே இருந்தோம். அன்னை இன்றி திருமணம் இல்லை என்ற உறுதியுடனேயே நான் இருந்தேன் ! என் காதலர்கூட பலவந்தம் செய்வதில்லை. திருமணம் திருமணம் என்றுதான் கெஞ்சுவார். உதட்டிலே ஒட்டிய உதடுகளைத் தவிர; என் உடலின் எந்தப் பகுதியையும் அவர் காணவுமில்லை, காண முயன்றதுமில்லை !'' என்று உறுதியாகக் கூறினாள்.

'' என்! களவு மணத்தில் என்ன தவறு ! அதுவும் இருமணத்தில் ஒருமுறை தானே !'' என்றாள் மங்கை.

'' இருக்கலாம். ஆனால் எல்லா முறைகளும் எல்லோருக்கும் பிடித்து விடுகிறதா என்ன ! அதற்காக நீ செய்தது தவறு என்று கூறவில்லை. அவர்தான் மணவாளர் என்று முடிவுகொண்டு நீயும், நீதான் மனைவி என்று முடிவு-

(8-ம் பக்கம் பார்க்க)

நமது மாவட்டச் செயலாளர்கள்

கடமை வீரர் கண்ணபிரான்

ஒருநாள் இரண்டு நண்பர்களிடையே காரசாரமான விவாதம் நடந்துகொண்டிருந்தது. அவர்கள் பேச்சிலிருந்து இருவரும் இரண்டு வேறுபட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாயிற்று; விவாதம் வளர்ந்தது. பேச்சு ஏச்சாக மாறிற்று. "என்னய்யா உங்க இராமசாமி நாயகர் பெரிய தலைவரோ" இப்படிக் கூறி வாயைக்கூட சரியாக மூடவில்லை ஒருவர். "பளார்" என்று கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டார் மற்றவர். அடிவாங்கிய நண்பர் மயக்கம் போட்டுவிழுந்தார். பிணமாகி விட்டாரோ என்று பயந்துவிட்டார் முதலில் கைவரிசை காட்டியவர். அவசரமாக எழுந்தார், முகத்தில் நீர்தெளித்து முதல் சிகிச்சை செய்தார். 'அப்பாடா' பிழைத்தேன் என்ற பெருமூச்சோடு, மயக்கம் தெளிந்த நண்பரை அவர் வீட்டிற்கு அழைத்துப் போய் விட்டபிறகு, தன் வீட்டிற்கு தைரியமாகத் திரும்பினார். பெரியாரைப் பழித்ததும், கன்னங்களைப் பதம் பார்த்த அந்த நண்பர் தான் சென்னை மாவட்ட செயலாளரான கே. எம். கண்ணபிரான் அவர்கள். அப்பொழுது இளைஞர்.

பள்ளித் தோழர்கள் அத்தனை பேரும் ஆச்சரியப்பட்டார்கள். கண்ணபிரானா இவ்வளவு தீவிரவாதியாக மாறிவிட்டார் என்று. காரணம்; கண்ணபிரான் அவர்கள் ஐந்தாவது பாரம் படித்துக் கொண்டிருக்கும்போது, அசல் காங்கிரஸ் காரராக இருந்தவர். கதர் தவிர மற்றவைகளை கண்ணாலும் பார்ப்பதில்லை என்ற அளவிற்கு கதர் பக்தராக இருந்தவர்! இந்நிலையில் அவர்கள் ஆச்சரியப் பட்டத்தில் வியப்பென்ன இருக்க முடியும்.

☆

1936-ல் சர். ஆர்க்காட் இராமசாமி அவர்களுக்கும் சத்தியமூர்த்திக்கும் தேர்தல் போட்டி. ஆர்க்காட்டாருக்கு அழகர்சாமியும், காஞ்சி கலியாண சுந்திரம் அவர்களும் தேர்தலில் வேலை செய்தனர். ஆனால் கண்ணபிரான் அவர்கள் சத்தியமூர்த்தியின் வெற்றிக்காக இரவு - பகல் - உணவு - உறக்கம், எதையும் கருதாமல் உழைத்தார். அந்த அளவிற்கு காங்கிரசில் பற்றுக்கொண்டிருந்த கண்ணபிரான அவர்கள்தான் இன்று திராவிடமுன்னேற்றக் கழகத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராகவும், சென்னை மாவட்டத்தின் செயலாளராகவும் பணியாற்றுகிறார் என்பதை எண்ணும்போது, நம் வெளிப்படையான லட்சியத்தில் பொதிந்திருக்கும் உண்மையின் சிறப்பை உணர்ந்து மகிழ முடிகிறது நம்மால்.

☆

'குடியரசு' கண்ணபிரான் அவர்களின் வாழ்க்கையில் ஒரு திருப்புக் கட்டம். அவரைப் பகுத்தறிவுப் பாசறைக்கு அழைத்துவந்ததேகுடியரசுதான! கண்ணபிரான் கழகமாக மாறினார் என்றால் அந்தப் பெருமை 'குடியரசை'யே சாரும். அதோடு மட்டுமல்ல. 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் கலந்து சிறை செல்லுமளவிற்கு அவரை தாயகத்தின் தனை உடைக்கும் மனவளத்தையும், மொழி உணர்வையும் தந்து பகுத்தறிவாளராக அவரைஆக்கிற்றுஅந்தக் குடியரசு.

பிறகு கண்ணபிரான் அவர்கள் சென்னை நகரின் நான்காவது வட்

டத்தில் திராவிடர் கழகத்தின் கிளை ஒன்று ஆரம்பித்து, மெல்ல மெல்ல வளர்த்து பலவட்டங்களை ஒன்று சேர்த்து வடசென்னை திராவிடர் கழகம் என்று அமைத்து பணியாற்றினார். 1948-ல் நடந்த மொழிப் போரிலும் பங்கேற்று சிறை சென்றார். சென்னை மாவட்ட திராவிடக் கழக அமைப்பாளராக மாறினார். பெரியார் அவர்களின் பாதை மாறியபொழுது, கண்ணபிரான் அவர்கள் பின்தொடர மறுத்து அண்ணாவின் அணி வகுப்பில் நின்றார். திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கத்திற்கு பலதுறையில் பொறுப்பேற்று உழைத்தார். அப்பொழுதே சென்னை மாவட்ட தி.மு.க.வின் துணை செயலாளராகவும், காரியக் கமிட்டி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

24-10-50-ல் ஆரியக் காவலன் ஆச்சாரிக்கு கறுப்புக்கொடி காட்டியபொழுது, தடியடிபட்டு சிறையிலடைக்கப்பட்டார். 7-4-51 இராசேந்திரப்பிரசாத் சென்னை வந்தபொழுதும் கருப்புக்கொடி பிடித்த காரணத்தால் ஒருமுறை கைது செய்யப்பட்டார். இப்படிப் பல வடநாட்டுத் தலைவர்களின் வருகையின்போதெல்லாம், கைது செய்யப்பட்டிருக்கிறார் கண்ணபிரான் அவர்கள்.

சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக்கழக மாநில மாநாட்டின்போது தொண்டர் படைத் தலைவராக நின்று பணியாற்றினார். 2-11-52-ல் சென்னை மாவட்ட தி. மு.க. செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆச்சாரி கொண்டுவந்த கல்வித்திட்டத்தை எதிர்த்து தி.மு.க. நடத்திய போராட்டத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியுடன் தடைமீறி சிறைபட்டார். போராட்டங்களில் மட்டும்தான் முன்நிற்பவர் நண்பர் கண்ணபிரான்என்று நினைக்கலாம்; ஆனால் அவர் ஒரு நல்ல நடிகர், லட்சிய நடிகர். கொள்கைக்காகநடிப்பவர். இயக்க நாடகங்களில் நடித்துச் சிறப்புப் பெற்றுள்ளார். குறிப்பாக அண்ணாவின் 'கல் சுமந்த கசடர்' என்ற நாடகத்தில், சேரன் செங்குட்டுவனாக, வீரன் வில்லவன் கோதையாக திறம்பட நடித்துள்ளார்.

'கொள்கைதான் மனிதனை முழுமனிதனுக்கிக் காட்டுகிறது' என்பது இவரின் கருத்து. அந்தக் கொள்கைக்காக எத்தகைய தியாகமும் செய்யும் மனவளம் பெற்ற கண்ணபிரான் அவர்கள் 1916-ல் பிறந்தவர். முத்தியாலுப்பேட்டையில் உயர்நிலைப் படிப்பை முடித்திருக்கிறார். இவரை அறிவியக்கத்திற்கு திருப்பியது குடியரசு. கொள்கை வீரராக மாற்றிய பெருமை 'திராவிடன்' ஆசிரியரான திரு.என்.வி.நடராசன் அவர்களைச் சாரும்; உடல் வளம்போல உள்ள உரமும் பெற்றுள்ள இவரின் தொண்டை இயக்கமும், தாயகமும் வரவேற்கிறது. எதிர் பார்க்கிறது. வாழ்க தொண்டுள்ளம்!

☆

ஆவடிக்கூத்தில்...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

என்று கூறி முப்பத்தி இரண்டு பற்களையும் வெளிக்குக்காட்டுவர். இதற்காகவே நேரு அந்த 'மயக்கு கலையை' திறமையாக கையாளுவதுண்டு. அதைப்பற்றி நமக்குக் கவலை யில்லைஎன்றாலும் 'தினமணி' ஏட்டிற்கு இதிலெல்லாம் ஒரு அற்ப மகிழ்ச்சி. நேரு ஒரேதாவில் மேடைமீது பாய்ந்தார். மேடையில் தத்தித் தத்திக் குதித்தார். திடீரென்று மக்கள் மத்தியில் புகுந்தார். சுப்பிரமணியத்தின் கழுத்தைப்பிடித்துத் தள்ளி மேடையை விட்டு இறக்கினார். ஆச்சாரியார் மேல் 'சிகெரெட் பாக்கெட்டை' எறிந்தார். ஒரு மந்திரியின் முகத்தில் தலையணையை எடுத்து வீசினார். இப்படி நேரு விளையாடினார். 'தினமணியின்' பலே செய்தி இது.

கார் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. 'டிரைவர் திருப்பு காரை' என்றார் நேரு. எங்கே என்றார் டிரைவர். எம். எஸ். வீட்டிற்கு என்றார் நேரு. சுப்புலட்சுமியை நேரு சந்தித்து பதினைந்து நிமிடங்கள் பேசினார். இதெல்லாம் தினமணியேட்டிற்கு முக்கியமான செய்தி. ஆவடி கூத்தின்போது இப்படிப் பல 'வளர்ந்த' பிள்ளைகளின், விளையாட்டுகள் நடந்திருக்கின்றன. ஒன்றைவிடாமல் 'தினமணி' 'பார் பார்' எம். எஸ். ஐ,நேரு போய் பார்க்கிறார். நேரு யார், நாட்டின் முதல்வர். 'எம். எஸ்.' சாதாரணப்பாடகி. ஆனால் கேட்காமல் கேட்கிறது தினமணி. 'ஐயனே! அன்பர்க்கு மெய்யனே! ஆனை முகத்தோனே!, என்று சுந்திராம்பாள் எவ்வளவு கத்தினாலும் என்ன பயன்? மற்றவர்களை எண்ணச்சொல்லி இருக்கிறது. ஆவடிக்கூத்தில் நடந்த உருப்படியான காரியங்கள் என்ன? நாட்டோரின் வாழ்விற்கு-என்ன நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டது. மக்களின் குறைகளுக்கு தலைவர்கள் செய்த பரிகாரம் என்ன? நிறைவேற்றப்பட்டிருக்கும் சில தீர்மானங்கள் நடைமுறையில் சாத்தியமா? செயல்படுத்த முடியுமா? பொதுவாக ஆவடிக்கூத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டதும், தமிழ் அவமதிக்கப்பட்டதும், மாம்பலமும்-மைலாப்பூரும்- தின்று மகிழ்ந்ததும்-பண முதலைகளும்-கள்ளமார்க்கெட்காரர்களும் பவனி வந்ததும், பனியாக்களும் மார்வாடிகளும் கொலு வீற்றிருந்ததையும் தவிர வேறென்ன உறுப்படியான காரியங்கள் நடந்தன. காங்கிரஸ்காரர்களிலேயே நல்லவர்களை-நாணயமானவர்களைக் கேட்கிறோம்; புதிய சமுதாயத்திற்கா வழிவகுத்தது ஆவடி மாநாடு? போய் இருந்த ஒருவர்கூட நிகழ்ச்சிகளை சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. செவிடர்கள் முன் சங்கீதக் கச்சேரியும்-குருடர்கள் முன் சித்திரக் காட்சியும் திறந்து வைக்கப் பட்டதுபோல, மொழிக்குழப்பமும்-திகைப்பும் தானே அங்கேமிச்சம்!

எது எப்படியோ காங்கிரஸ் இன்னும் சாகவில்லை. பணம்தர முதலாளிகள் எங்களுடன் இருக்கிறார்கள் 'அதோ மேடையில்' என்று சுட்டிக்காட்ட பயன் பட்டது மாநாடு. அப்பப்பா-எவ்வளவு ஊழல். ஆதிக்கவெறி' அர்த்தமில்லா பணச்செலவு. ஆடம்பரப் பிரபுக்களின் கையில் இன்னும் எத்தனை காலம் சிக்கித்தவிக்குமோ இம் மாநிலம்! உண்மையில் தாங்கொணா நாற்றம்தான் வீசுகிறது காங்கிரஸ் ஸ்தாபனத்தை நெருங்கினால். அதை மூலவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள், அங்குள்ளோரின் தூக்கம் ஓரளவு தெளிந்திருக்கிறது. இங்குள்ள வால் பிடித்து வயிறு வளர்க்கும் சிலருக்கும்; வடநாட்டாருக்கு ஆலவட்டம் போடும் சுப்பிரமணியம் போன்றவர்களின் தூக்கமும், தெளியவில்லை. வடநாட்டு வெறியர்களிடம் 'நல்லபிள்ளை' பெயரெடுக்கவும்-'ஆரியமாயை'யின் முகஸ்துதிக்குத் தங்களை அடிமையாக்கிக் கொண்டு சிக்கிச் சீரழியும் 'தூக்கபிம்பங்கள்' துயிலெழுமா? தாயகத்தின் துயர் விலகுமா?

—வில்—

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டு அவரும் களவொழுக்கத்தில் ஈடுபட்டது தவறு என்று நான் சொல்லவில்லை. ஏதோ, எனக்கு அது பிடிக்கவில்லை! பிடிக்கவில்லை என்றால், என்ன சந்யாச விரதமோ என்று கேட்காதே! அந்த ஆசை இல்லாமலா இருக்கும்? இருந்தது. ஆனால் அன்னையைக் காணுமுன் நான் அன்னையாக விரும்பவில்லை. அவ்வளவுதான்!" என்று மளமளவென்று பேசி முடித்தாள்.

மங்கை, இப்போது அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள். "பெண்கள் பலவீனமானவர்கள் என்று சொல்கிறார்களே பைத்தியககாரர்கள். சகல வசதிகள் இருந்தும் உடல் வெறியை அடக்கிவைத்துக் கொண்டிருக்கும் பெண்ணும் இருக்கிறாள்!" என்று மங்கை நினைத்தாள். பேச்சின் இனிமையில் இருவரும் பல ரகசியங்களையும் பரி... மாறிக்கொண்டனர். ஒருவரை ஒருவர் கட்டிப் பிடிப்பதன்மூலம் தங்கள் மனோநிலையை வெளிப்... படுத்திக்கொண்டனர். நேரம், நில... உட்பட அவர்கள் பேச்சில் வராத... காதல் விவகாரம் இல்லை என்ன... லாம். அந்த உற்சாகத்தில் உடன் வந்த கமலினியையும், தாங்கள் முடிக்கவேண்டிய காலைக் கடன்களையும் மறந்தேவிட்டனர். இப்போது திடீரென்று மங்கைக்கு ஒரு 'அதிர்ச்சி' கலந்த எண்ணம் ஏற்... பட்டது.

"அடடா! இடைதுறை நாட்... நிலைமை என்ன என்பதையே கே... காமல் விட்டுவிட்டோமே!" என்... றாள். காதல் பேச்சு, லட்சியத்தை... யும் மறக்கடிக்கிறது என்பதில் அ... ளுக்கு வெட்கமும் கவலையும் ஏ... பட்டது. உடனே "கமலினி... கமலினி!" என்று சப்தம் கொடு... தாள். நந்தினியும் சருக்கி விழுந்... வாறே எழுந்து, நதியைப் பார்... தாள். கமலினியைக் காணோ... ஐயோ! கமலினி எங்கே! "க... லினி! கமலினி!'; என்று கூ... னாள் நந்தினி. அவர்களைப் ப... பிடித்துக்கொண்டது.

(தொடரு...

தாங்கொணு நாற்றமடா தம்பி !

"நான் உறுதியாகக் கூறுவேன் காங்கிரசில் அயோக்கியத் தனமும்-ஒழுங்கீனங்களும் மலிந்து விட்டன. பெரிய புள்ளிகள் கூட இடம்பெறுகின்றனர். இதை நான் என் சொந்த அனுபவத்திலிருந்தே அறுதியிட்டுரைப்பேன். தவிர காங்கிரசில் வாலிபர்கள் மிகக்குறைவு. வாலிபர்கள் காங்கிரசில் சேர மறுக்கிறார்கள். வயதான காங்கிரஸ்காரர்களால் வாலிபருடன் வாதாட முடிவதில்லை. காங்கிரஸ்தாபனம் இப்பொழுது நடந்து வருவது பழைய பெருமையினால் தான். இப்போதைய உழைப்பினால் அல்ல. மாற்றுக்கட்சிகளில் வாலிபர்கள் நிறைய இருக்கிறார்கள். பிரஜா சோஷலிஸ்டுகள் குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள். சம்பந்தப்படாத விஷயங்களை அவர்கள் பேசுவார்கள். காங்கிரஸ்காரர்களிலும் பலர் அப்படித்தான் இருக்கிறார்கள். காங்கிரஸ்கட்சி தேர்தல் சமயத்தில் தான் விழித்துக்கொள்ளுகிறது வெறும் கையெழுத்துப் போடுபவர்கள் எல்லாம் காங்கிரசில் இருப்பதால் பலம் குறைந்து விட்டது. 10,000 காங்கிரஸ்காரர்களில் 500 பேர்தான் உண்மையான காங்கிரஸ்காரர்களாய் இருக்கிறார்கள். காங்கிரசில் அரசியல் முதலாளிகள் பெருகி விட்டனர்."

ஆவடியில்
நேருபண்டிதர்.

★

"பெரிய பெரிய தொழிற்சாலைகளும், வேலைத் திட்டங்களும் உருவாக்கப்படுவதில் இந்த மாநிலத்திற்கு உரிய பங்கு கிடைக்கவில்லை. இதை இங்கே குறிப்பிடுவது என் கடமையாகும். தேசிய திட்டங்களில் இடம்பெறுகின்ற பெரிய தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் முதலியன தென்னுட்டிலும் இடம் பெறவேண்டும். இதைத்தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்." அம்புஜம்மாளின் ஆவடிப் பேச்சு இது.

வடநாடு தென்னுட்டைப் புறக்கணிக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் வடவருக்குத்தான் சலுகைகள் அதிகம் தரப்படுகின்றன. நேருவின் சர்க்கார் ஓரவஞ்சனையுடன் நடந்து கொண்டு பெரும் திட்டங்களையெல்லாம் வடநாட்டிலேயே நிறைவேற்றி தென்னுட்டை அலட்சியம் செய்கிறது. வடக்கில் இதனல் வளம் கொழிக்கிறது. தெற்கு என்றும்போல் தேய்கிறது. இதை ஆயிரம் முறை விளக்கி இருக்கிறோம் மேடைகளில். நாம் எழுப்பிய அதே குரலை கொஞ்சம்-சூழ்நிலைக்கு தக்கபடி மெருகேற்றி அம்மையார் நம் கருத்தை ஆவடியில் பேசியிருக்கிறார்கள். வட இந்தியத் தலைவர்கள் மத்தியில் நம் குரல் கேட்டிருக்கிறது.

★

"காங்கிரசில் இப்பொழுது உண்மை ஊழியர்களுக்கு இடமில்லை. இந்த அவல நிலை மாற வேண்டும். யாரிடம் பணம் குவிந்து கிடக்கிறதோ அவர்கள்தான் இப்பொழுது காங்கிரஸ் அமைப்பில், வலிவு பெற்று தேர்தல்களில் இடம் பெறுகின்றனர். இதன் காரணமாக காங்கிரசில் உள்ள ஏழைகள் மூலையிலே தள்ளப்பட்டு விடுகின்றனர். பணம் படைத்தவனுக்கே பதவி என்ற நிலை காங்கிரசில் இருப்பது கூடாது"

ஆவடியில்
அல்குராய் சாஸ்த்திரி

★

ஆவடிக்கூத்தின் போது மேற்கு வங்கத்தைச் சேர்ந்த காளிபாத முகர்ஜி என்பவர் பேசும்போது காங்கிரஸ் டெலிகேட்டுகள் தேர்தலில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்றதைக் குறிப்பிட்டு-ஒரு மாநிலத்தில் காங்கிரஸ் ஊழியர்களுக்கு 'சாராயம்' கொடுக்கப் பட்டது என்று கூறினர். உடனே மௌலானா ஆசாத் மேற்கு வங்கத்திலா சாராயம் கொடுத்து ஓட்டு வாங்கினர் காங்கிரஸ்காரர்கள் என்று கேட்டார். இல்லை இல்லை! பீகாரில்தான் அப்படி செய்தனர் என்று முகர்ஜி பதிலளித்தார்.

இன்னும்

★

"சுதந்திரம் வந்த பிறகு காங்கிரசார்பேராசை பிடித்து, பதவியைத் தேடி ஓடுகிறார்கள். இந்தியாவை முன்னேற்றமடையச் செய்யவேண்டுமானல் நாம் யோக்கியர்களாக இருக்கவேண்டும். காங்கிரசில் ஏற்பட்டிருக்கும் மோதுதல் மாநிலங்களில் மட்டுமல்ல - கிராமங்களிலும் அடிதடிகள் நடைபெறும் அளவில் இருக்கின்றன. நாம் காங்கிரசின் அடிப்படை கொள்கைகளை மறந்து விட்டோம். சுயநலக்காரர்களும் பதவிப்பித்தர்களும் காங்கிரசில் நிறைந்து விட்டனர்."

ஆவடியில்
பம்பாய் முதல்வர்
மொரார்ஜி தேசாய்.

★

"இப்பொழுது ஒவ்வொரு காங்கிரஸ்காரன் நடத்தையும்-கேவலமானதாகவும் - கீழ்த்தரமாகவும் மாறிவிட்டிருக்கிறது."

திருமதி மாயாபானர்ஜி

சாவாயோ காங்கிரசை நம்பி !

செய்வினை...

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

"எல்லாம் வேண்டும். அத்தோடு குலமும் வேண்டும், பணமும் வேண்டும். என்மகள்செல்வத்தோடு வாழ்வதுதான் எனக்குப்பெருமை" என்றார் நாராயணன்.

"வசந்தியைக் கேட்கவேண்டும்" என்றாள் தாய். என் சொற்படி நடக்க வில்லையென்றால் அவள் என்மகளல்ல" என்றார் தந்தை. ஆணுலகச் சுதந்திரக் கருவூலத்தில் அன்னபூரணியின்மறுப்பும், எதிர்ப்பும் செல்லாக் காசுகளாயின. சித்தையன் மணப்பேச்சை முறித்து விட்டு, காளியப்பனுக்குப் பெண் கொடுக்க ஒப்பி விட்டார் நாராயணன். ஊரார் பேச்சுக்கும் ஏச்சுக்கும் இடமில்லாமல் நான் செய்கிறேன் என்று மாமா வாக்குறுதியளித்தார்.

"திருமணம் முடியவும், மனம் போல் மகிழவும் இன்னும் நான்கே நாட்கள். பொறு மனமே பொறு" துள்ளிக் குதிக்கும் உள்ளத்தை யடக்கினர் சித்தையனும் வசந்தியும். அந்தப் புதிய வீடு வேலை முடிந்து கம்பீரமாக நின்றது. அதிலே இவர்கள் வளர்த்த காதல் இன்பமும் முற்றி முறுகி வலிவும் வனப்புமாகத் திகழ்ந்தது.

கலப்பாலில் நஞ்சு போல் விழுந்தது மண முறிவுச் செய்தி. அவர்கள் மனம் முறிந்தது! செழித்து வளர்ந்த காதற் பயிர் எதிர்பாராது எழுந்த சூறுவளியிலே சிக்கிச் சீரழிந்தது. சித்தையன் ஏழை. பண பலமற்றவன். வசந்திபெண்உரிமையற்றவள். இருவரது உள்ளங்களும் கொதிப்பேறி வேதனைப் பட்டு வெந்து நீறுவது தவிர வேறென்ன செய்யமுடியும் ?

பாவம், சித்தையன் செட்டியார் கடையில் ஒரு வாரம் விடுமுறை பெற்று வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடந்தான். மணமுறிவால்நேர்ந்த மானக்குலைவை அவனால்சகிக்கவேமுடியவில்லை. வசந்தியோ நடைப்பிணமாகவிளங்கினள். மணமே வேண்டாம் என்று மறுத்தாள். தாயிடம் கெஞ்சினள்; வாதாடினள். என்னென்னவோ சொல்லியழுதாள். எதுவும் பயன் படவில்லை. தந்தையின் இரும்பு நெஞ்சத்தை இளக்க முடியவில்லை தாயின்கண்ணீர்த்துளிகளால். தவியாகத் தவித்தாள் வசந்தி.

குறிப்பிட்ட நாளிலே உற்றார், உறவினர், நண்பர்கள் நல்லோர் புடை சூழ, சம்பிரதாயம் சடங்குகள் அணுப்பிசகாமல் திருமணம் நடைப்பெற்றது, காளியப்பனுக்கும் வசந்திக்கும்! மணப்பெண்ணின்சிந்திய மூக்கும், சிவந்த கண்களும் வாழ்த்து கூற வந்தவர்களுக்குத் திகைப்பையளித்தன. "போகப் போக சரியாகப்போய்விடும்" என்று ஒருவருக்கொருவர் சமாதானம் கூறிக் கொண்டனர். மணமகன் காளியப்பன் தகுதிக்கேற்ற மனைவி கிடைத்தாள் என்று மகிழ்வால் பொங்கிப் பூரித்தான். ரசிக மாமாவுக்கு மரியாதைகள் பலசெய்தான். திருமணம் விருந்து, வேடிக்கைகளோடு ஆடம்பரமாக நடைபெற்று ஓய்ந்தது.

அன்று இரவு, பால் நிலவு எங்கும் பொழிந்தது. சாந்தி முகூர்த்தத்திற்கென்று படுக்கையறை சித்தமாயிற்று. வாழ்வுச் சுவையை எதிர்பார்த்து எக்களிப்போடு மஞ்சத்திலே இறுமாந்துக் கிடந்தான் காளியப்பன். அவன் உள்ளத்திலே ஆயிரம் இன்பக் கற்பனைகள் ஓடி வந்து குவிந்தன. "மண்ணுங்கட்டி"யான தன் வாழ்வு செழிக்க மகோன்னதமான நேரம் வந்து விட்டது என்று கருதிக்களிப்படைந்தான்.

வசந்தி மிடுக்கு நடையோடு அறைக்குள் வந்தாள். முந்தானையில் மறைத்து வைத்த விளக்கு மாற்றை வெளியே எடுத்தாள். "மடையா! எழுந்திரு !" என்றாள் அதிகாரத் தொனியில்! நிமிர்ந்து நின்றாள். அவள் கண்களிலே தீப்பொறிகள் சிதறின. உதடுகள் படபடத்தன. பத்ரகாளிபோல் தோன்றினாள்.

காளியப்பன் கலங்கினான். மனக்கோட்டை சரிந்தது. "உம். எழுந்திரு ! பல பேரறியத் தாலி கட்டி விட்டால் மனைவியாகி விடுவேனென்று நினைத்தாயா ? நீ என்னைத் தீண்டக்கூடாது. என் படுக்கையில் உனக்கு இடமில்லை. மறந்து விடு ! போ ! மரியாதையாக வெளியே போய் விடு ! மறுத்தாயானால் மானத்தைக் கெடுத்து விடுவேன்" கர்ச்சனை புரிந்தது அந்தப் பெண் புலி. நடுங்கினான் காளியப்பன். மண்ணுங்கட்டி கரைந்தது அந்தப் பெருமழையிலே! பரிதாபத்தோடு அவளைப் பார்த்தான். எழுந்து கால்களைப் பற்றினான். விழுந்தது விளக்கு மாற்றுப் பூசை! பால் பாத்திரம், பலகாரத்தட்டுகள் பறந்தன. காளியப்பன் சமாளித்துப் பார்த்தான். வசந்திக்கு எங்கிருந்து தான் அந்த பலம் வந்ததோ தெரியவில்லை! "ஐயோ! அம்மா! போதுமே !" என்று அலறித் துடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான் காளியப்பன்! தடாரென்று கதவைச் சாத்தித் தாளிட்டாள் வசந்தி.

என்ன நடக்குமோ என்று ஏங்கிக் கிடந்த அன்னபூரணியின் கண்களிலே நீர் சுரந்து வழிந்தது. நாராயணன் ஒன்றும் தோன்றாமல் இருந்தார். மருமகனைத் தேற்றினார், தேற்றினார், இன்னும் தேற்றிக் கொண்டே இருக்கிறார்! அன்று மூடிய வசந்தியின் மனக் கதவு திறக்கவேயில்லை !

சொல்லி முடித்தாள் அந்த மாது. இரயில் சின்ன சேலம் புகைவண்டி நிலையத்தில் நின்றது.

மாந்திரிகர் மருதாசலம் கூறினார் :— "இது வசந்தியை மணக்க விரும்பிய பயல் சித்தையனின் வேலை. செய்வினை செய்திருக்கிறான்" என்று.

இறங்க வேண்டிய அந்த மாது எழுந்தாள். அழுத்தம் திருத்தமாகக் கூறினாள். "பகுத்தறிவற்ற தந்தையின் மாபெரும் தவறுதான் வசந்தியின் வாழ்வைக் கெடுத்தது" என்று.

"அப்படியானால் செய்வினையல்லவென்கிறீர்களா? அவசரமாக வினவினார் மாந்திரிகர். அவள் இறங்குவதற்குள் தன் கருத்தை நிலைநாட்டக் கருதினார். அவள் அவர் முகத்தைப் பார்த்தாள்.

"இருக்கலாம். ஆனால் குற்றவாளி சித்தையன் மட்டுமல்ல. வசந்தியும் தான். தாலி கழுத்தில் ஏறுவதற்குள், உணர்ச்சி வசப்பட்டு உடலுறவு கொண்டு விட்டனர் அந்தச் செய்வினைதான் இது" என்று கூறினாள். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தாள். சிறுமியின் கையைப் பற்றிக் கொண்டு மட மட வென்று இறங்கிச் சென்றாள்.

மாந்திரிகர் மருதாசலம் ஆத்திரத்தோடு அவளைப் பார்த்தார். மற்ற ஆண்கள் ஆச்சரியத்தோடு பார்த்தனர். அனுதாபத்தோடு பார்த்தனர் பெண்கள். ஆனால் அவள் தான் வசந்தியின் தாய் அன்னபூரணி என்பது அவர்களில் யாருக்கும் தெரியாது.

★

★ எதிரொலி ★

உயர் திரு.
ஆசிரியர் "தென்றல்"
சென்னை.

அன்புடையீர், வணக்கம்.

இந்த வார தென்றல் இதழில் (22-1-55) பிரசுரிக்கப்பட்ட கடிதமொன்று மிக்க அதிர்ச்சியை விளைவித்தது; அதில் காணப்பட்ட விஷயங்கள் ஆதாரமற்ற புனை கற்பனை என்ற காரணத்தால்.

தென்றல் பொங்கல் மலர்களை அதிகப்படியான விலைக்கு விற்கப்பட்டிருப்பதாகவும் கடிதமெழுதிய மக்கள் முன்னேற்றக் கழகத்தவர் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இவ்வாறு ஏதேனும் பிரதி அதிகப்படியான விலையில் விற்கப்பட்டது என்று நிரூபிக்க முடியுமா என்று சவால்விட்டுக் கேட்கிறேன். இக்குறிப்பு எனது கண்யத்திற்கு பெரிதும் இழுக்கு செய்கின்றது என்பதோடு, என் கண்யத்தை உருவாக்கிய பிளாக்பள்ளி தி. மு. கழகத்திற்கும் அதன் கொள்கைக்கும் இழுக்கு கற்பிக்கின்றது. தி. மு. கழகத்தவர்களிடையே நான் கொண்டுள்ள செல்வாக்கும், பிளாக் பள்ளி கிளையின் செயற்குழு உறுப்பினர் என்ற மாண்பும் ஒரு சில பத்தாம் பசலிகளால் களங்கப்படுத்தப் படுவதற்காக எழுதப்பட்ட கடிதங்களின் உண்மையறியாமல், கடிதங்களில் கண்ட சேதி உண்மையா என்று ஆராயாமல் அதனை பிரசுரிப்பது பத்திரிகா தர்மத்திற்கு ஒப்புமா?

இனி, மக்கள் முன்னேற்றக் கழகத்தவர் கடைக்காரரிடம் முன் பணம் தந்துள்ளதாக அவர்களால் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்பற்றி அந்த கடைக்காரரால் எனக்கு தகவல் தரப்படவில்லை. அக்கடைக்காரர் தனக்கு எத்தனை பிரதிகள் தேவையென்ருே அல்லது எவ்வளவுபேர் தன்னிடம் முன்பணம் கட்டியுள்ளனரென்ருே எனக்குக் கூறியதே கிடையாது. இந்த நிலையில் அவருக்கு எங்ஙனம் பிரதிகளை வலிய கொடுக்க முடியும்? இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஒருங்கே யோசிக்குமிடத்து மக்கள் முன்னேற்றக் கழகத்தவர் வேண்டுமென்றே கற்பனை செய்து கூறிய அபாண்டமான வீண் புகார் என்பது தெளிவாகிறது.

முரசொலி இதழொன்று ரூ2-8-0க்கு விற்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முரசொலிக்கு நான் ஏஜெண்ட் அல்ல. நான் ஏஜெண்டாக இருந்து வரும் "கலை மன்றம்", "கரும்பு", "கலையரங்கம்" மற்றும் சில பத்திரிகைகள் எவ்வித குறைபாடுமின்றி ஏஜெண்ட்—நிர்வாகம் இருந்துவருகிறது. அவற்றின் ஆசிரியர்கள் எமக்கு உதவும் முறையில் தேவையான பிரதிகள் அனுப்புவதோடு எனது உழைப்பை கண்காணித்து பாராட்டி வருவதோடு எம்மீது புனைந்து கூறப்படும் புகார்களை அவர்கள் ஏற்பதில்லை. எனது உழைப்பை நீங்கள் ஆராய்வீர்களென்றும், கண்காணிப்பீர்களென்றும் எண்ணியிருந்தேன்; ஆனால் புகார் கடிதங்களை உண்மையென்று எண்ணி பிரசுரித்தது மிகமிக வருந்துதற்குரியது.

தென்றல் விற்பனையாவது மிகவும் அத்தியாவசியமானது என்ற நோக்கோடு எனக்கு உதவியளித்து வரும் தி. மு. க வோடு பல்வேறு வகையில் முரண்பட்டு இயங்கும் மக்கள் முன்னேற்றக் கழகத்தவர் இதுபற்றி என்னோடு கலந்துகொள்ளாமல் தங்கள் கழக சார்பிலேயே உங்களுக்குப் புரட்டுக்கடிதம் எழுதியிருப்பதன் அடிப்படைக் காரணம் அவர்கட்கு தி. மு. க தோழர்கள் பலர்மீது ஏற்பட்டிருக்கும் கொள்கைத்துறையில் தோன்றியிருக்கும் மனக்கசப்பே ஆகும். இதனை நிரூபிக்க நான் எனது கழகச் செயலாளரிடம் கடிதம் வாங்கி அனுப்ப முடியும் என்பதைக் குறிப்பிடுகிறேன்.

தற்போது என்னைப்பற்றி ஏற்பட்டிருக்கும் தவருன கருத்திற்கு பரிகாரம் செய்யும் வகையில் இக்கடிதத்தின் சில முக்கிய பகுதிகளை அடுத்த தென்றலில் பிரசுரிப்பீர்கள் என்று கருதுகிறேன். எனது ஏஜெண்ட் நிர்வாகம் என்றுமே பிசகாது என்று கூறிக்கொண்டு, உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். பொங்கல் மலர்கள் உங்கள் வசமிருக்குமேயாயின் சிலவற்றை அனுப்பி வைக்கவும். இவ்வாறு அனுப்பி வைத்தால் எங்கள் கண்யத்தைப் புலப்படுத்த வீண் வரட்டு வாதம் பேசிய மக்கள் முன்னேற்றக் கழகத்தவருக்கும் தந்து அவர்கள் கண்ட குறையையும் போக்க முடியும். வணக்கம்.

அன்பன்
T. மாதவன்
(ஏஜெண்ட்; தென்றல்)
பெங்களூர்.

(இதுபற்றி பெங்களூர் நண்பர்களுக்கு எழுதி விசாரித்ததில், மலர் அதிகவிலையில் விற்கப்பட்டது உண்மைஅல்லவென்று பிறகு தெரியவந்தது. முதலில் இது போன்ற குறைகள் எங்கும்நேராமலிருக்கவே அக்கடிதம் பிரசுரிக்கப்பட்டது. இதனுல் ஏஜண்டின் நடத்தைக் களங்கப்படவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிருேம். அதோடு மலர் கைவசம் இல்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிருேம்.

வாழ்க பெங்களூர் ஏஜண்ட்!
வைரவன்
நிர்வாகி

★

அனுதாபம்

'மெயில்' என்ற ஆங்கில தின இதழின் ஆசிரியரான திரு. ஏ. ஏ. எய்ல்ஸ் என்பவர் சென்ற கிழமை இராயப்பேட்டையில் தமது இல்லத்தில் இயற்கை எய்தினர் என்பதைக் கேட்டு வருந்துகிருேம். 27 ஆண்டுகளாக அப்பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றிய எய்ல்ஸ் சிறந்த அரசியல் எழுத்தாளர். இவர் ஒரு முறை சென்னை நகராட்சி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சமுதாயப் பொது நலங்களில் அக்கரை காட்டியதோடு - முடிந்த அளவு உதவிகளும் செய்துள்ளார். அத்தகைய ஒரு நல்லவரை இழந்து வருந்தும் அவர் குடும்பத்தவர்க்கு நம் ஆழ்ந்த அனுதாபங்களை சொல்லிக் கொள்கிருேம்.

ஆவடியில் அக்ரகாரம்!

மாநாடு நடந்த இடத்திற்கு சத்திய மூர்த்தி என்ற ஒரு ஆரியரின் பெயர். வரவேற்பு குழுவின் தலைவி அம்புஜம் அம்மாள் என்ற ஒரு பிராமணர். உணவுக் கமிட்டியில் தலைவரிலிருந்து 'இலை' எடுப்பவர்கள் வரை 'அவாள்'! மாநாட்டு மேடையில் வடக்கும், ஆரியமும் பரிணமித்து இருந்தது. ஒட்டிக் கொண்டிருந்த சுப்ரமணியத்தை நேரு பண்டிதர் கழுத்தை பிடித்து தள்ளி-கீழே போய் கூட்டத்தை கவனி" என்று விரட்டி விட்டாராம்.! மாம்பலம்-மைலாப்பூரில் உள்ள அத்தனை ஐயாகளும் அம்மாமிகளும் இரண்டு நாட்களாக அங்கேயே 'வயிற்றை'க் கழுவிக்கொண்டனராம். அந்த அளவிற்கு வசதியும் - 'ஓசி' அனுமதிச் சீட்டுகளும 'அவாளு'க்கு கிடைத்திருக்கிறது. ஆவடியில் பார்ப்பனர்களுக்கும் பனியாக்களுக்கும் இடையில் ஒரே ஒரு தமிழர். அசல் தமிழர். பச்சை த்தமிழர் **காமராசர்** முழு நிலாவாகத் திகழ்ந்தார்.

இலக்கிய வளர்ச்சிக்கு
தென்றல்
வழங்கும்
ரூ 2000

விபரங்களுக்கு:
தென்றல் :: சென்னை-6.

வணங்காமுடி
(மாதம் இருமுறை)
விரைவில் வெளிவருகிறது

விபரங்களுக்கு:
நிர்வாகி,
'வணங்காமுடி'
S. M. L. தெரு,
தேவகோட்டை.

வெளி வந்து விட்டது! சிறந்த ஆராய்ச்சி நூல்!
கண்ணதாசன் எழுதிய
'தமிழர் திருமணமும் தாலியும்'
விலை அணு ஆறு
முன் பணம் அனுப்பி பெற்றுக் கொள்ளவும்
அருணோதயம்
5. தம்பைய செட்டித் தெரு. மேற்கு மாம்பலம்.
சென்னை 17

வெண்பாப் போட்டி

முதற் போட்டிக்கு வந்த ஏராளமான வெண்பாக்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றில், சிலவற்றை வெளியிட்டுள்ளோம். மீதியிருப்பவை அடுத்த இதழில் வெளிவரும். நேரிசை வெண்பாக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். கடிதங்கள் வேண்டாம். ஒரு கார்டில் வெண்பாவை எழுதி விலாசம் எழுதினுல் போதும். தபால் தலைகள் அனுப்பவேண்டாம். திருப்பி அனுப்பமாட்டோம். பிரதி எடுத்துக்கொண்டு அனுப்பவும். ஒருவர் பல எழுதினும் ஒன்றே வரும்.

ஆ—ர்

1. பூக்காமற் போகுமோ பூ !

பெற்றிருக்கும் செல்வம் பிறர்க்குக் கொடுப்பதனுல்
வற்றுமென வள்ளல் வழங்கானே ?--பொற்றொடியே !
ஈக்களெல்லாம் தேனை எடுத்தேகும் என்றஞ்சிப்
பூக்காமற் போகுமோ பூ !

— கே. சீனுவாசன், செங்கல்பட்டு.

★

கன்னடமும் கேரளமும் கன்னித் தமிழ்நாடும்
அன்ன தெலுங்கினமும் ஆதரவாய்த்--தென்னகத்தை
நோக்க உருவாகும் நுண்ணரும்பு, போதாயின்
பூக்காமற் போகுமோ பூ !

— கு. இரமாதேவி, சென்னை - 1

★

◉ வையம் இகழ்ந்தாலும் வால்பிடிப்போர் தம்தொழிலைச்
செய்ய மறப்பதுண்டோ ? சேல்விழியே--மொய்குழலார்
நோக்காமற் போனுலும் நோகாத நற்றூழை
பூக்காமற் போகுமோ பூ !

— நாவுக்கரசன், காரைக்குடி.

★

ஆண்ட திராவிடர்கள் ஆள நினைத்தின்று
மீண்டும் களம்புகுந்தால் மீளாவோ—நீண்டநாள்
ஆக்கம் கெடுக்கின்ற ஆரியர்தாம் என்செய்வார் ?
பூக்காமற் போகுமோ பூ !

— வித்வான் - வெங்கிடேசன், நெல்லிகுப்பம்.

★

இமயத்தின் கோடேறி இன்னலிலுங் கூவு
நமையாண்ட கொள்கை நயத்தை—அமைதோளாய் !
சாக்கா டுளதென்று சார்ந்த மணம்பரப்பப்
பூக்காமற் போகுமோ பூ !

— ஆ. இளங்கோவன், தூத்துக்குடி.

★

என்றோ முளைத்தகொடி ஏற்றம் விளைத்தகொடி
இன்றமிழர் நால்வர் இனக்கொடியைத்--தின்றபகை
நீக்கி நிதமுழைத்தால் நின்றன் குலக்கொடியிற்
பூக்காமற் போகுமோ பூ !

— "குன்றன்", ஆசிரியர், பந்தாரஹள்ளி

★

வண்ணத் தமிழ்பாய் வளமார் திருவிடத்தை
எண்ணித் துணியும் எழுச்சிமிகு--அண்ணுதான்
காக்காமற் போவாரோ ? காலத்தே பூங்கொடியும்
பூக்காமற் போகுமோ பூ !

— ம. இராமசாமி, பேரூர்.

★

அல்லுண்ட கூந்தல் அழகே ! தழுவுகையில்
புல்லேன் எனநீ புலந்தாலுங்--கொல்விழியால்
நோக்காமல் வூடினும் நோகிலேன், காலத்தே
பூக்காமற் போகுமே பூ !

— "வில்லவன் கோதை" கோயமுத்தூர்.

★

வாக்கும் பொருளும் வளர்க்குந் தமிழ்ப்புலவன்
காக்கும் மனமுமகல் லாயுதமாய்க்--காக்கவே
ஆக்கம் விருமபி யகழ்ந்துநிலத் திட்டவிதை
பூக்காமற் போகுமோ பூ !

— வி. வேலாயுதன், கொழும்பு.

நல்லார் செயலை நயனிலார் தாக்கிடினும்
பொல்லாத கொண்டு புகழ் போக்குவரோ—வல்லாவும்
மாக்கள் அனையருந்தன் மாட்சி குலைப்பரென்று
பூக்காமற் போகுமோ பூ !

— பழ. தமிழன்பன், திருச்சி.

★

இன்றில்லை யென்றாலும் இன்பத் திராவிடநா(டு)
என்றும் அமையாதோ இந்நாட்டில்—தென்றலே !
பூக்காமல் இன்றிருக்கும் பூங்கொடிதான் ஓர்நாளில்
பூக்காமற் போகுமோ பூ !

— மறை. ந. ப. அட்சரம், எழும்பூர், சென்னை-8.

★

வெஞ்சமரிற் சென்றேதான் வெற்றித்தார் சூடிவரும்
வஞ்சமற்ற வள்ளல் வளவனைக்--கொஞ்சியே
காக்குங் கணவனுய்க் கண்டகற் பாள்வதனம்
பூக்காமற் போகுமோ பூ !

— டி. என். என். கவிக்குஞ்சரப்பாவலர், வாளாடி.

★

இந்தத் திருநாடு இன்பத் திராவிடமாம்
அந்தத் திருநாள் அடுத்துவரும்--வந்த'களை'
நீக்கப் பசுங்குருதி நீர்பாய்ச்சிக் காத்திருந்தால்
பூக்காமற் போகுமோ பூ !

— புலவர் 'இளநாகன்', மேலைச்சிவபுரி.

★

இளங்கதிரின் இன்முகத்தை எண்ணியிர வெல்லாம்
இளைத்திருந்த தாமரையின் ஏக்கம்--களைந்திடவோ
நோக்காமல் கீழ்வானில் நோக்கினன் ஆதித்தன் !
பூக்காமற் போகுமோ பூ !

— க. இராமதாசன், புள்ளம்பாடி.

★

நாக்கில் நரம்பின்றி நற்குருதி நாளமின்றி
நோக்கிற்றன் மானமற்ற நூலணிவோர்--தாக்கிடினும்
ஊக்கும் பகுத்தறிவு உள்ளிட்டப் பூங்காவிற்
பூக்காமற் போகுமோ பூ !

— பொ. பூ. வாணி அழகரசன், லால்குடி

★

தண்ணிலவு பூத்த தனியின்ப மாலையிலே
பெண்ணமிழ்தே ! நாணத்தாற் பேசாமல்--கண்மலரை
நோக்கம் தவிர்த்தொழிய நோவமறைத் தென்னபயன் ?
பூக்காமற் போகுமோ பூ !

— க. அசலாம்பிகை, கண்டறச்சேரி

★

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 2

ஈற்றடி: "என்றும் இளமை இவர்க்கு"

முடிவு தேதி 5-2-55

முகவரி :

நீதிபதி 'சகி'

'தென்றல்'

2-127, மௌண்ட்ரோடு, சென்னை-6.

நாங்கள் கேட்கிறோம் நீங்கள் சொல்லுங்கள்

கேள்வி 1

" 'இடுக்கண்' என்ற வார்த்தை, திருக்குறளில் எத்தனை இடங்களில் வந்துள்ளது ?"

முடிவு தேதி 5-2-55

பதில் அனுப்பவேண்டிய முகவரி :

"நா. கே., நீ. சொ."

'தென்றல்' சென்னை-6.



சிங்காரப் பூங்கா!

செக்கர் வானத்தின் அழகு அங்கே சிரித்து விளையாடும். அன்றலர்ந்த மலர்கள், அந்திநேரத்தின் அலங்காரம், அன்புரை சிந்திடும் அதரங்கள், ஆனந்தக் கூத்துகள் அந்தப் பூங்காவிற்குப் புதிதல்ல.

ஓவியர்களின் உள்ளக் கற்பனையில் உதித்தெழுவது போன்றே ஓடையொன்று, காதலர்களின் மொழிகளுக்கு தாளங் கொட்டும் முறையில் 'சலசல'வென்ற ஒலியைக் கிளப்பிக்கொண்டு ஓடியது. பாடும் வண்டுகளை நாடும் வண்ணமிருந்த இதழ்கள் ஏராளம். இந்த இடத்தைத்தான் இன்பம் இருப்பிடமாக்கிக்கொண்டு, கொஞ்சுமொழி காதலர்களின் தீஞ்சுவைக் கன்னங்களுக்கு வரவேற்புரை நிகழ்த்திய வண்ணமிருந்தது! சோலையிலே காணும் பூவிலே மெத்தை, மாலையிலே மங்கையரின் மயக்குப் பேச்சுகளை மட்டுமன்றி, மலைத்தோள் மாவீரர்களின் அன்புரைகளையும் கேட்டுக்கேட்டு பழக்கப்பட்டிருந்தது. இந்த இடத்திற்கு உரியவர்கள்தான் அவர்கள் மலர்க்குழலியும், அவள் கருத்தைக் கவர்ந்த கட்டழகனும்!

மலர்க்குழலி! மொழி கொட்டும் மலர்! மறையாது நடமாடும் மின்னல்! எழிற் பிழம்பால் எழுதப்பட்ட அழகு ஓவியம்! என்ற வருணனையை அவன் ஒப்புவதில்லை. அதையும் தாண்டிவிட்ட தையல் அவள்! செதுக்கப்பட்ட சிலையை நிகர்த்தவள் - செங்கரும்பின் சுவைச் சொல்லாள்தான், அவன் சிந்தையில் குடியேறி சுடர்விடும் திருவிளக்கு!

மாலை வந்த நேரம்தான் அவர்கள் மனதில் மகிழ்ச்சி வந்து குவியத் துவங்கும்.

அவன் வருவான்!

அவள் வருவாள்!

எடுத்து அடி வைப்பாள்; எழிலிடை துவளும்! தோகை மயிலென வருவாள்; துள்ளும் களிப்பில் எதிர்கொள்வான்!

"துடியிடையாளே! தூய்மையின் சிற்பமே! வரவுக்காக காத்திருந்தேன்; வந்துவிட்டாயா, எந்திழையே!' என்ற பாகுச் சொற்களை வீசிடுவான், சிங்கத்தின் நடையான் அந்த சிங்காரியின் சொந்தக்காரன்.

கொய்மலர் மேனியாள் இதைக் கேட்டதுமே மெய்மறந்து போவாள். அவன் கோபுரத் தோளின்மேல் சாய்வாள். இன்பக் கொள்ளையிலே இருவரும் உலகை மறப்பர்.

வீசும் தென்றல் அவர்களை மீண்டும் பேசவைக்கும். சிமிட்டுகின்ற அவள் கண் இமைகள், சிரிப்பு நடனமாடும் அவள் இதழ்கள், அவன் சிந்தனையில் மாறு இடம் பெற்றுவிட்டன!

முத்தான வாயால் அத்தான் என்பாள்; அவன்சித்தம் குளிரும். புன்னகையில் பூரிப்பான், அந்தப் பூவையின் கனகநிறக்கன்னங்களைக் கிள்ளி மகிழும் கட்டிளங் காளை! அவள் வாய் இயற்றும் ஆயிரமாயிரம் கோணல்மாணல்கள்வனப்புக்கு வனப்பு செய்யும்! இதைக் காணும் இவ்வீரன் காதல் உலகின் வீதிகளில் வலம் வந்தபடி இருப்பான். திங்கள் முகத்தாள், 'நமது திருமணம் எப்போது' என்பாள். 'விரைவில் முடிப்பேன், என் விழைவே!' என்பான்.

'தோழி எனக்காக காத்திருப்பாள், அன்பே!' எனக் கூற, 'தோகை நிகர்த்தவளே! மாலை நேரத்தை மறந்துவிடாதே! என் மனதையும் வருந்தவிடாதே, மான் விழியே!' என மறுமொழி பகர, முறுவல் ஒன்றை பரிசாக்கிவிட்டு, கப்பிய நாணத்தோடு, கம்மிய குரலில், நாளை வருகிறேன் என்று பாளைச் சிரிப்பைச் சிந்திவிட்டு சென்று விடுகிறாள்.

இவ்வாறு ஓடிய நாட்களில் ஒரு நாள்...! வழக்கம்போல் வரவு நிகழ்ந்தது. அவன் வருவதைக் கண்டாள். அகமகிழ்வுகொண்டாள். தொங்கும் பொன்னூசல் ஒன்றைத் தொத்தினாள்! தொடர்ந்து அவளருகே அவன் சென்றான்.

நாள்முழுதும் மாலைநேரமாக இருக்கக் கூடாதா? என்ற அவன் மொழிகளைக் கேட்டு நகைத்தாள். விரைந்து வெளிக்கிளம்பிடும் வெட்கத்தை தலைகுனிந்து மறைத்துக் கொண்டாள்.

'அன்பே, ஊசலை ஆட்டுங்கள்' என்று நிலைமறந்த நிலையில் மொழிந்துவிட்டாள்.

உள்ளத்தில் தேன் கொட்டியது போல், உணர்ச்சிக்கு இன்பம் வார்த்ததுபோல், தேன் வெறுக்கும் வண்டுண்டோ? பொன்துலங்கு மேனியாளின் பணி வெறுக்கும் கருத்துண்டோ?' என்று, புதையல் வந்து கூவியதுபோல், பூங்கொடியாளை நெருங்கி, 'என் பூங்காவனக் குயிலே, இதோ, ஆட்டுகிறேன்' எனச் சொல்லி, ஊஞ்சலாட்டுகிறான், எல்லையில்லா உவப்போடு!

களிப்பு அங்கே கைகொட்டி ஆரவாரம் செய்கிறது. அந்த நேரத்தில்தான் கன்னியின் இதயத்தில் கலைக்கற்ற இன்பக் கருத்துக்களும், அதனூடே எழுகின்ற காட்சிகளும் உருவாகி, அவள் நெஞ்சத் திரையில் நாட்டியமாடுகின்றன. உணர்ச்சியின் வயத்தால் நாணம் மறந்த செயல் ஒன்றையும் செய்யத் துணிந்தாள்! ஆம். அப்பொழுது தான் ஆடும் ஊசலிலிருந்து, கை நெகிழ அவள் வீழ்ந்துவிடுகிறாள். கீழேயல்ல; குன்றெடுக்கும் அவன் பெருந்தோளைத் தழுவும் வண்ணம் அவன் மலைமார்பின்மேல் வீழ்கிறாள்.

இமைப் பொழுதில் நிகழ்ந்தது இந்த இனிய செயல்! அவள் பாசாங்கு அறிந்த அவன், பரவசமெய்தியவனாய் பண்பின் பெட்டகத்தை இறுக அணைத்துக்கொண்டான். களிப்புக் குளத்தில் நீந்தும் கெண்டையானாள் அவள்! பூச்செண்டு முடித்த அவள் கொண்டையைத் தடவி தன்னை மறந்தான், அந்தத் தடந்தோளான்.

புள்ளினங்கள்கிளப்பியபேரொலி மீண்டும் அவர்களை இப்புவியின் நினைப்புக்கு இழுத்துவரவே, பூவிதழ் மேனியாள், பொங்கிடும் பூரிப்பில், 'பிறர் காண்பர்' என நாத்தடுமாற, குழறிடும் மழலையெனக் கூறுகிறாள்.

மயக்கம் தெளிந்தவனாய், தயக்கம் தேங்கிய குரலில், 'தையலே! நீ போ!' எனக்கூறி; கடைவிழிப் பார்வையில் கண்டான் அவளை! வெண் சங்கில் கருநீலம் விளையாடுவதுபோல் கண்ணின் கருமணி சுற்றிச் சுழன்றிட, அதன் சுழற்சியின் சுவையைப் பருகிடும் வண்ணம் கிடந்தான்! அவன்மேல் அவள் கிடந்தாள்! இதோ, கவிஞரின் மொழியிலே அதைக் கவனியுங்கள்:

... ...

ஊசல் ஊர்ந்தாட ஒருஞான்று
வந்தானை
ஐயசிறிதென்னை ஊக்கி எனக்
கூறத்
தையால் நன்று என்று அவன்
ஊக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன்
மார்பின் வாயாச் செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன்
கொண்டான்மேல்
மெய்யறியா தேன்போல் கிடந்
தேன் மன்னுயிடை
மெய்யறிந்தேற்று எழுவே
ஞயின் மற்றெய்யென
ஒண்குழாய் செல்க எனக்கூறி
விடும் பண்பின்
அங்கணுடையன் அவன்."

[கலித்தொகை—குறிஞ்சிக்கலி
பாட்டு :1]

காலம் ஓடுகிறது. இக்கன்னியின் வாழ்வும் பல மாறுதல்களைக் கண்டுவிட்டன. இன்று மலர்க்குழலி மனையாட்சி புரியும் மங்கை நல்லாள்! 'வீடு மலர்க்காடு, விருந்தினரும் வீட்டாரும் பாடுகளிவண்டுகள்தாம்! பார்க்கத் தகும் காட்சி' என்றவாறு இன்று அவள் எக்களிப்புக் கொள்கிறாள்! இந்த சிரிப்புக்காரியை மாலை நேரத்து சிவப்புவானம் உவப்பிலாழ்த்துகிறது; காரணம் பழைய நினைவுகள் இதயத்திரையிலே படமாக உருவெடுத்து ஓடினதுதான்! நினைவுச்சுழலிலேசிக்கிஅவள் நிலைதடுமாறிய நேரத்தில் அன்று ஊசலாடிய நினைப்பும் வந்தது. ஊஞ்சல் ஆட ஆட, அவர் உதிர்த்த கொஞ்சு மொழிகள், அதைக் கேட்டுப் பூரித்துப்போன அவள் உள்ளம், அதன் காரணமாய் ஊசலிலிருந்து அவன் மார்பின்மேல் பொய்யாக வீழ்ந்தது போன்ற களிப்புக் காட்சிகள் அவள் கருத்தில் நாட்டியமாடத் தொடங்கியது. நினைவலைகளின் நடுவிலே பெருமூச்சுவிட்டு, 'அந்த நாள் வந்திடாதோ!?' என இயம்ப முனைந்தாள்.

'எந்த நாள்—இன்பத் துந்துபி முழங்கிடும் நாள்தானே! இதோ வந்துவிட்டது, என் விழியே' என்று இன்பம் இருவிழிகளுக்குத் திரையாக நிற்க, இமை கொட்டும் அந்தஎழில் ஓவியத்தை நெருங்குகிறான், அவள் இச்சையில் குடியேறியவன்! இவ்வுரை கேட்டபின் உணர்வு கொண்டாள்! எனினும் 'அந்த நாள்' காட்சி அவளைவிட்டு அவள் நெஞ்சைவிட்டு அகலவில்லை எப்படி அகலும்? என்றும் அ... யாத கவின்பெறு காட்சியல்லவா அந்த 'அந்த நாள்' காட்சி.

ஜி. பத்மநாபன், பி....

தென்றல்
திரை

பிப்ரவரி முதல் வெளிவருகிறது
இது - தென்றல் தரும் ஏடு!
இது - திரைவானில் ஒரு பூக்காடு!
பிரமிப்பு தரும் அளவு படங்கள்!
ஏராளமான பக்கங்கள்!
எல்லாம் புதிய பகுதிகள்!
இதுவே முறையான திரை!

விலை அணா நான்கு

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.